# மன்னா

# அக்குவானஸ் பல்கலைக் கல்லூரியுடன் இணைந்த உயர் கல்வி நிறுவனமாக ஞானோதயம் தரமுயர்வு

## கொழும்பு பேராயரும் அமதிகளின் மாகாண முதல்வரும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்

மன்னார் தாழ்வுபாடு வீதியில் - கீரிக் கிராமத்தில் - அமைந்துள்ள அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி நிறுவனமான ஞானோதயம் கொழும்பு அக்குவானஸ் பல்கலைக்கல்லூரியுடன் இணைந்த ஒரு உயர் கல்வி நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இத்'தரமுயர்த்தல்' நிகழ்வு கடந்த யூலை மாதம் 11ஆம் திகதி கொழும்புப் பேராயர் இல்லத்தில் இடம்பெற்றது. கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், அமலமரித் தியாகிகளின் வடமாநில முதல்வர் அருட்திரு. கலாநிதி எட்வின் வசந்தராஜா (அ.ம.தி.) அடிகளாரும் இது தொடர்பான உத்தியோகபூர்வ ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர். இதன்போது ஆரம்பத்தில் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறியை அக்குவானஸ் பல்கலைக் கல்லூரியுடன் இணைந்து நடாத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



## அடம்பன் வியாகுல மாதா ஆலயத் திறப்பு விழா





புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அடம்பன் பங்கின் தாய் ஆலயமான புனித வியாகுல மாதா ஆலயத்தின் திறப்பு விழா கடந்த யூலை மாதம் 9ஆம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது.

அடம்பன் பங்குத்தந்தை அருட்திரு. மில்ரன் தேவராஜ் (நியூட்டன்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்து திருப்பலியையும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். (இந்நிகழ்வின் மேலதிக படங்களை 8ஆம் பக்கத்தில் காணலாம்.)

## மடுத்திருத்தலத்தின் ஆவணிப் பெருவிழா

மடு அன்னை கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் மடுத்திருத்தலத்தின் ஆவணிப் பெருவிழா ஆவணி மாதம் 15ஆம் திகதி சிறப்பாக இடம் பெறவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்திரு. எஸ். எமிலியானுஸ்பிள்ளை மற்றும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை ஆகியோர் லைமையில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



## கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் பீடத்தின் புதிய அதிபராக கிறிஸ்துநாயகம் அடிகளார் நியமனம்




கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் பீடத்தின் புதிய அதிபராக மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை பிலிப்புப்பிள்ளை கிறிஸ்துநாயகம் அடிகளார் இலங்கை ஆயர் மன்றத்தினால் நியமிக்கப்பெற்றுள்ளார்.

இந்நியமனத்திற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பானது இலங்கை ஆயர் மன்றத்தின் தலைவரும் பதுளை மறைமாவட்டத்தின் ஆயருமாகிய மேதகு வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் கடந்த யூலை மாதம் 7ஆம் திகதி கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் வெளியிடப்பட்டது. இவர் தனது புதிய பணிப்பொறுப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் முதல் வாரத்தில் ஏற்கவுள்ளார்.

கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் உருவாக்குனராகவும் விரிவுரையாளராகவும் பணிபுரிந்துவந்த கிறிஸ்துநாயகம் அடிகளார் இப்போது இன்னுமொரு முக்கிய பணியையும் பொறுப்பேற்கின்ற இவ்வேளையில் மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள் அனைவருடைய நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. இறைவனின் நிறைவான ஆசீரும் மடு அன்னையின் பரிந்துரையும் அடிகளாருக்குக் கிடைக்க வேண்டுமென்று செபிப்போம். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உயர் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அருளப்பு கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளார் உரோமாபுரியிலுள்ள ஊர்பானியா பாப்பிறைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 04 வருடங்களாக திருவிவிலிய இறையியலில் தனது முதுமாணிப் பட்டப் படிப்பை (Licentiate Studies - Master's Degree) மேற்கொண்டு, தான் கற்ற பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பாடங்களிலும் சராசரியாக 29.17/30 = (97.23/100) புள்ளிகளைப் பெற்று, 'Summa Cum Laude' (First Classs Pass) எனப்படும் அதிசிறப்புத் தேர்ச்சியினைப் பெற்று, தான் கற்ற திருவிவிலிய இறையியல் துறையில் பல்கலைக்கழகத்தில் முதல்நிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ரூபன் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டச் சமூகம் சார்பாக மன்னா தனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

## ஆவணம் கார்மேல் மாதா ஆலயத் திறப்பு விழா





புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நானாட்டான் பங்கில் உள்ள ஆவணம் புனித கார்மேல் மாதா ஆலயத் திறப்பு விழாவும் வருடாந்த் திருவிழாவும் கடந்த யூலை மாதம் 16ஆம் திகதி காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது.

நானாட்டான் பங்குத்தந்தை அருட்திரு. அருள்ராஜ் குருஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய ஆலயத்தைத் திறந்து வைத்து திருவிழாத் திருப்பலியையும் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். (இந்நிகழ்வின் மேலதிக நிழற்படங்களை 8ஆம் பக்கத்தில் காணலாம்.)

## பெரிய கட்டு புனித அந்தோனியார் ஆலய

# வருடாந்தத் திருவிழா





















மன்னார் மறைமாவட்டத்தின் செட்டிகுளம் பங்கிற்குட்பட்ட பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திருவிழாத் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் உட்பட பல குருக்கள் இத்திருவிழாத் திருப்பலியில் இணைந்துகொண்டனர். பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகைதந்திருந்த சாரணியர் இத்திருவிழாவில் உதவி புரிந்தனர். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சூருபப் பவனியும் ஆயர் அவர்களினால் திருச்சூருப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

மடுத்திருப்பதிக்கு அடுத்ததாக மன்னார் மறைமாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான மக்கள் கூடும் யாத்திரைத்தலமாக பெரியகட்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு புதிய ஆலயம் அமைப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

# சுதேச குருக்கள் என்போர் யார்?

அருட்திரு. அ. யூட் குரூஸ்
இயக்குனர், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள், மன்னார் மறைமாவட்டம்



இறைவனின் கரங்களில் இருந்து பெற்றுக்கொண்ட எமது வாழ்க்கை ஒரு அழைப்பு. அழைப்புக்கள் பலவாறாயினும் குருத்துவ அழைப்பு என்பது உன்னதமானதும் மேன்மையானதுமாகும். குருக்கள் எமது ஞான மேய்ப்பர்கள் ஆவர்.

பிரான்ஸ் நாட்டிலே 1889ஆம் ஆண்டில் ஜான் பிகார் என்ற பெண்மணி 'புனித பேதுரு சபை' என்று ஒரு சபையை நிறுவி குருக்களுக்கு உதவுவதற்கு முன்வந்தார். அந்தச் சபை செபத்தாலும் பரித்தியாகத்தாலும் பல குருமாணவர்களையும் துறவிகளையும் உருவாக்கியது.

திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் பொதுக் குருத்துவத்தில் பங்கெடுக்கின்றோம். குருத்துவம் எனும் திருவருட்சாதனத்தின் மூலம் குருக்கள் பணிக்குருத்துவத்தில் இணைந்துள்ளார்கள். சுதேச குருக்கள் என்போர் யார்? எமது சொந்த நாட்டிலிருந்து, பிரதேசங்களிலிருந்து உருவாக்கப்பட்டு, எமது கலாசார, பண்பாட்டு, பழக்கவழக்கங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள் என்பவற்றைப் புரிந்துகொண்டு பணிசெய்பவர்களே சுதேச குருக்கள்.

சுதேச குருக்கள்பற்றி 15ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசர் கூறும்போது, "தங்களுடைய சொந்த நாட்டிலிருந்து குருக்களை உருவாக்கவேண்டியது பணிகளைச் செய்பவர்களின் பிரதான கடமையாக இருக்க வேண்டும். அதிலேதான் அந்தந்த திருச்சபையின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு என்பன அடங்கி இருக்கின்றன" என்கின்றார். 9ம் பத்திநாதர் பாப்பரசர் கூறும்போது, "உங்களுடைய சொந்த (சுதேச) குருக்கள் துறவிகளை உருவாக்க வேண்டும். இந்தக் கடமையை முழு ஆற்றலோடு செய்ய மறுத்தால் அப்போஸ்தலிக்க பணிகள் முடங்கியே போய்விடும். இவ்வாறாகச் சொந்தக் குருக்களை உருவாக்காத நிலையானது அந்தத் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒரு தடையாகவும் குறைபாடாகவுமே இருக்கும் என்பதில் ஐயமில்லை" என்கின்றார். சுதேச குருக்களை உருவாக்குவோம். அவர்கள் பணிக்காகச் செபிக்க முன்வருவோம்.

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் சுதேச குருக்களின் தேவை ஏன் என்பதை நோக்கும்போது, எசே 3:17ல் "மானிடா! நான் உன்னை இஸ்ராயேல் வீட்டாருக்கு காவலாக நியமித்துள்ளேன். என் வாயின் சொற்களைக் கேட்டு, அவர்களை என் யெரால் எச்சரிக்கை செய்" என்று ஒரு நாட்டிற்குக் காவலாளியாக ஏற்படுத்துவதை நாம் காண்கின்றோம்.

அத்தோடு எசே. 22:30இன்படி "எனக்கும் இந்த நாட்டு மக்களுக்குமிடையே ஒரு சுவரை எழுப்பி, அதன் மூலம் இந்நாட்டு மக்களை அழியாதபடி தடுப்பவன் ஒருவனை அவர்களிடையே தேடினேன்" என்று குருக்களின் தேவைப்பற்றிய இறைவனின் ஆதங்கத்தைக் காண்கின்றோம்.

"உங்கள் தீயவழியினின்று திரும்பி வாருங்கள். உங்கள் செயல்களை சீர்படுத்திக்கொள்ளுங்கள். வேற்றுத் தெய்வங்களை நாடிச்சென்று அவற்றை வழிப்படாதீர்கள்" என்று இஸ்ரயேல் மக்களை எச்சரிக்கும் கடவுள், "இறைவாக்கினரான என் ஊழியர் அனைவரையும் நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் அனுப்பிவைத்தேன்" (எரே. 35:15) என்று காலத்திற்கு காலம் மக்களைச் சீர்படுத்தவும் வழிநடத்தவும் தம் பணியாளர்களான குருக்களை அனுப்புவதை அறிகின்றோம்.

யோவேல் இறைவாக்கினர் 2:17இல் குறிப்பிடுவதுபோல "ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலிப்பீடத்திற்கும் இடையே நின்று அழுத வண்ணம், 'ஆண்டவரே உம் மக்கள்மீது இரக்கம் கொள்ளும். உமது உரிமைச் சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிசொல்லுக்கும் ஆளாகாதீர்' எனச் சொல்வார்களாக!" இதன் வழியாக மக்களுக்காக எந்நேரமும் பரிந்துரைக்கின்ற, இறைவனின் இரக்கத்தை, அருளை, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற நடுநிலையாளர்களாக குருக்கள் திகழ்வதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

சுதேச குருக்கள் ஏன் எதற்கு இறைவனால் எமக்கு அனுப்பப்படுகின்றார்கள் எனும்போது இறைவாக்கினர் எசேக்கியலுக்கு புரியாத பேச்சும் கடின மொழியும் உடைய மக்களிடம் அல்ல. இஸ்ரயேல் வீட்டாரிடமே நீ அனுப்பப்படுகின்றாய் (எசே3:5) என்று வேறு மொழி, இனம் கடந்த மக்களுக்கல்ல மாறாகத் தெரிந்த அறிந்த மக்களிடையே அனுப்பப்பட்டு இறைவனுடைய சொற்களை அவர்களுக்கு அறிவிக்கப் பணிக்கப்படுவதை நாம் காண்கின்றோம்.

ஒவ்வொரு குருவும் "மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பாவங்களுக்குக் கழுவாயாக காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள்முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகின்றார்கள். இக்குரு அறியாமையில் இருப்போருக்கும், நெறிதவறி நடப்போருக்கும் பரிவுகாட்டக்கூடியவராயும் இருக்கின்றார் (எபி 5:1-4).

கத்தோலிக்க திருச்சபை 2017 யூலை 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை சுதேச குருக்கள் தினத்தை கொண்டாடியது. தூய யோசப் வாஸினுடைய ஆண்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். தூய யோசப் வாஸ் அடிகளார் சுதேச குருக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். நாம் மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும் சுதேச குருக்களை உருவாக்கவும் வளர்க்கவும் முன்வரவேண்டும்.

எமது நாட்டின் ஆயர்கள், குருக்கள், அவர்கள் பணிகள் அனைத்தையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்கவும், ஏராளமான சுசேத குருக்கள் எம்மிடையே இருந்து உருவாக்கப்படவும் ஆசிப்பதோடு, எம் குருக்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு எம்மாலான உதவிகள் புரிந்து இறையரசு இவ்வுலகில் மலர குருக்களோடு சேர்ந்து இறையரசை கட்டியெழுப்புவோமாக.

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### ஆவணி

01. புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்
02. புனித அந்தோனியார் திருவிழா - பள்ளக்கமம் (முருங்கன்).
05. மரிய மாதா திருவிழா - மாளிகைத்திடல்
06. புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு
- குழந்தையேசு திருவிழா - மூன்றாம்பிட்டி, ஆலங்குளம்
- மடுத்திருப்பதியின் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்.
07. சதாசகாய அன்னை திருவிழா - பாவற்குளம்
10. தூய லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்
15. மரியன்னை விண்ணேற்புப் பெருவிழா - மருதமடு திருவிழா
19. வேளாங்கண்ணித் திருவிழா - வைத்தியசாலை (மன்னார்)
- மடுமாதா திருவிழா - தங்கநகர்
20. தூய வேளாங்கண்ணி - தம்பனைக்குளம்
21. குழந்தை யேசு சிற்றாலயம் - கள்ளியடிப்பிட்டி
22. தூய பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம்
- வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய திருவிழா - தோட்டவெளி
- அன்னை திரேசா மறைபரப்பு அருட்சகோதரிகள் விழா
24. புனித பார்த்லேமியு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25. கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
26. புனித பரலோக மாதா திருவிழா - முள்ளிக்குளம்
- புனித அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
- சதாசகாய மாதா திருவிழா - கணேசபுரம் (தேவன்பிட்டி).

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
**- மன்னா நிர்வாகம்.**

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

# நீதிபதி இளஞ்செழியன்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

நீதிபதி இளஞ்செழியன்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

தற்போதைய நிலைமையில் கடந்த 22.07.2017 அன்று மாலை 5.15 மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவில் அருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. மாணிக்கவாசகர் இளஞ்செழியனை நோக்கி மேற்கொள்ளப்பட்டதாகத் தென்படுகின்றது. இவர் வழங்கிய நேர்காணலில் இருந்து இதனைப் புரிந்துகொள்ளக் - கூடியதாயுள்ளது. இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்கள் அமைதியான பாதுகாப்பான தம் வாழ்விற்கு நீதித்துறையையும் நீதிபதிகளையும் பெரிதும் நம்பியுள்ளனர். நீதித்துறைக்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நீதிபதி இளஞ்செழியன் அவர்கள் மேற்கொண்டு வரும் துணிச்சலான நடவடிக்கைகளுக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக இத்தாக்குதலை நாம் பார்க்கின்றோம்.

இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியான நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் திருவாளர் ஹேமச்சந்திராவின் மரணம் எம்மைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

15 வருட காலமாகப் பிரமாணிக்கமாக அப்பணியில் இருந்தவர். தமது பணியின் அர்ப்பணிப்பின் உச்சக்கட்டமாக தமது உயிரைத் தியாகம் செய்துள்ளமை, எமது உள்ளங்களை நெகிழச் செய்துள்ளது. அவரது ஆன்மா சாந்தியடைவதாக! அவரது மனைவி மக்கள் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். காயமடைந்த மற்ற மெய்பாதுகாவலர் விரைவில் நலமடையப் பிரார்த்திக்கின்றோம். நீண்டகாலமாகத் தமது பாதுகாவலராகப் பணியாற்றிய மெய்ப்பாதுகாவலரின் திடீர் இழப்பினால் வேதனையுற்றிருக்கும்




நீதிபதிக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறோம். மக்களுக்கான நற்பணியைத் தொடர்ந்து துணிச்சலுடன் தொடர அவரைப் பாதுகாக்க வேண்டுமென இறையருளை வேண்டுகின்றோம்.


மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் சரியான திசையிலும் வினைத்திறனுடனும் விரைவாகவும் இடம்பெற்று இனிமேல் இதுபோன்ற செயல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

நீதிபதி இளஞ்செழியன் மட்டுமன்று மற்ற நீதிபதிகளும் தொடர்ந்து துணிச்சலுடனும் நீதியுடனும் செயல்படக்கூடிய வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என ஆணைக்குழுவின் தலைவர் அருட்பணி S.V.B. மங்களராஜா அடிகளாரால் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

# குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்தந்தையர்கள்



அருட்பணி. S.J.Q. ஜெயறஞ்சன் (யாழ் மறைமாவட்டம்)




அருட்பணி. K. ஜேம்ஸ் சிங்கராயர் (யாழ் மறைமாவட்டம்)



அருட்பணி. A. இம்மானுவேல் (அமலமரித் தியாகிகள் சபை)




அருட்பணி. L. றொகான் டோமினிக் (கிளறேசியன் சபை)



அருட்பணி. G. அற்புதராஜா (அமலமரித் தியாகிகள் சபை)



அருட்பணி. F. லொசிங்ரன் (அமலமரித் தியாகிகள் சபை)



அருட்பணி. எட்வின் வசந்தராஜா (அமலமரித் தியாகிகள் சபை)

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குருக்களும், அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த நான்கு குருக்களும், கிளரேசியன் சபையைச் சேர்ந்த ஒரு குருவும் இவ்வாண்டு தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளிவிழாக் காண்கிறார்கள்.

யூபிலி நாயகர்களான அருட்தந்தையர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.

# துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும் திருச்சிலுவைக் கன்னியர்கள்



திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்த நான்கு அருட்சகோதரிகள் இவ்வாண்டு துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாக் காண்கின்றனர்.

**அருட்சகோதரிகள் :**

லோறன்சியா லோறன்ஸ் (மைலட்டி, யாழ்ப்பாணம்)
லுசில்டா சவிரி (ஆலங்குளம், காத்தான் குளம் பங்கு)
சில்வியா செபஸ்ரியாம்பிள்ளை (கன்னாட்டி, செட்டிகுளம் பங்கு)
றஞ்சினி அந்தோனிப்பிள்ளை (கன்னாட்டி, செட்டிகுளம் பங்கு)
ஆகியோரே வெள்ளிவிழாக் காணும் அருட்சகோதரிகளாவர்.

இவர்கள் அனைவரும் தமது துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை கடந்த ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி நினைவு கூர்ந்தாலும் (07.04.1992 – 07.04.2017), மாகாண மட்டத்திலான யூபிலி விழா நன்றித் திருப்பலி இம்மாதம் (ஓகஸ்ட்) 30ஆம் திகதி நீர்கொழும்பு தலுவக்கொட்டுவவில் அமைந்துள்ள மாகாண இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

யூபிலி நாயகிகளான அருட்சகோதரிகளுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா பெருமகிழ்வடைகிறது.

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் செலஸ்ரின் (அமதி) அடிகளார்

**06.08.1992 – 06.08.2017**



பேசாலைக் கிராமத்தின் மகனும், அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்தவருமான அருட்திரு. அருளானந்தம் பிரான்சிஸ் செலஸ்ரின் மஸ்கிரிஞ்சு அடிகளார் இவ்வாண்டு தனது குருத்துவப் பணி வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழாக் காண்கிறார்.

1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி பேசாலை புனித வெற்றி நாயகி அன்னை ஆலயத்தில் அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மறையுரைஞராக, அமதிபுரம் பங்குத்தந்தையாக, மாகாண நிதிப்பொறுப்பாளராக, முழங்காவில் அன்பக இயக்குனராக, திருநெல்வேலி - கோப்பாய் பங்குத்தந்தையாக, செட்டிகுளம் பங்குத்தந்தையாக, அமல உற்பவத்தின் மேலாளராக, குருமாணவர்களின் உருவாக்குனராக என பலநிலைகளின் அன்புப் பணிபுரிந்த அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பான யூபிலி நல் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வடைகிறது.

## குருத்துவ வாழ்வில் 60 ஆண்டுகள்




அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அமிர்தநாதன் கில்லறியன் வேதநாயகம் (அமதி) அடிகளார் கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 60 வருடங்களை நிறைவு செய்து வைரவிழாவைக் காண்கிறார்.

88 வயது நிரம்பிய வேதநாயகம் அடிகளார் இலங்கையில் உள்ள அமலமரித்தியாகிகளில் வயதில் மூத்தவராகத் திகழ்கின்றார். கட்டடங்களை வடிவமைக்கும் கலையில் (Architect) நிபுணத்துவம் பெற்ற இவர் திருச்சபை சார்ந்த பல கட்டிடங்களுக்கு வரைபடம் வரைந்து உதவியுள்ளார்.

மன்னார் மறைமாவட்டம் சார்பாக வேதநாயகம் அடிகளாரின் அன்புப் பணிகளுக்காக நன்றி கூறுவதுடன் அவர் உடல், உள, ஆன்மீக நலன்களுடன் வாழ இறையாசீர் வேண்டுகின்றோம்.

# தலைமன்னாரில் பிரமாண்டமான கொடிமரம்



தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலயத் திருவிழாவானது ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி வருடாந்தம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதற்காக ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் ஆரம்பமாவது வழக்கம். அதற்கமைய தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலய வளாகத்தில் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சவுக்குமரம் ஒன்று கொடியேற்றத்திற்காக தயார்படுத்தப்பட்டிருந்தது. அதனை பக்தர்கள் சுமந்து சென்று ஆலயத்திற்கு அருகாமையில் கொடியேற்றத்திற்கு ஆயத்தமாக வைப்பதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை தேசிய அன்பியக் குழுவின் மன்னார் மறைமாவட்டத் தரிசிப்பு

## இலங்கை தேசிய அன்பியக் குழுவின் 2017ஆம் ஆண்டிற்கான 2வது பொது ஒன்றுகூடலும், திட்டமிடல் கூட்டமும்

## மடு தியான இல்லம் 2017 யூலை மாதம் 10 -12










கடந்த 2016ஆம் ஆண்டில் இலங்கை தேசிய அன்பிய குழுவின் மன்னார் வருகையும், மடு மறைக்கோட்டப் பங்குகளில் அன்பியத் தரிசிப்பும், தேசியக் குழுவின் கூட்டமும் மன்னார் மறைமாவட்ட மருதமடு அன்னையின் தியான இல்லத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் 2017, இவ்வாண்டிலும் தேசிய குழுவின் வருகை இடம்பெற்றது.

### 1ஆம் நாள் அமர்வு – 10.07.2017
### வவுனியா மறைக்கோட்டம்

முதல்நாள் நிகழ்வாக 10.07.2017 அன்று இலங்கை அன்பியத் தேசியக் குழுவினர் மாலை வவுனியா மறைக்கோட்டத்தின் பம்பைமடுப் பங்கில் அமைந்துள்ள "வரோட்" நிலையத்தில் வந்து தரித்துநின்றனர்.

அன்று மாலை 4.30 மணிக்கு வவுனியா மறைக்கோட்டத்தில் தேசியக் குழுவின் வருகைக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த அன்பியங்களைத் தரிசித்தனர். வவுனியா பங்கின் மகாஇறம்பைக்குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளின் அன்பியக் குழுக்களையும், சிதம்பரபுரத்தில் ஒரு அன்பியக் குழுவையும், வேப்பங்குளப்பங்கின் கூமாங்குளம், தவசிகுளம், தாஸ்கோட்டம் ஆகிய 8 அன்பியங்களையும் தேசியக் குழுவினர் 8 குழுக்களாகப் பிரிந்துசென்று பார்வையிட்டு, அன்பியச் செப வழிபாட்டில் பங்கெடுத்து உரையாடி, அன்பிய வாழ்வு குறித்து கேட்டறிந்தனர்.

சுமார் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை அன்பியங்களின் சந்திப்பும், இறுதியில் அவ்வவ் அன்பியங்களின் கலைநிகழ்வுகளும் இரவு உணவுப்பகிர்வும் நடைபெற்றன. இலங்கை அன்பியத் தேசியக் குழுவினர் வவுனியா மறைக்கோட்டப் பங்கு மக்களின் அன்பிய வாழ்வின் ஈடுபாடு, வாழ்க்கை மாற்றத்தின் அனுபவங்களை இச்சந்திப்பின் ஊடாக அறிந்துகொள்ள முடிந்தது.

தேசிய அன்பியக் குழுவினர் இந்த 8 அன்பியங்களையும், பங்குத்தந்தையர்களான அருட்பணியாளர்கள் அகஸ்ரின் புஸ்பராஜா அடிகளார், சத்தியராஜ் அடிகளார், லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார், வவுனியா உதவிப்பங்குத்தந்தை மேரி பெயிலன் குரூஸ் அடிகளார் மற்றும் அன்பிய இணைப்பாளர்கள், பயிற்சிகள் வழங்கி நெறிப்படுத்திய மன்னார் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி. ஆரோக்கியம் அடிகளார், அவரோடு இணைந்த மன்னார் மறைமாவட்ட மத்திய குழு உறுப்பினர்கள் ஆகியோரை வியந்து பாராட்டி மகிழ்ச்சி கொண்டனர்.

இலங்கை அன்பியத் தேசியகுழு, தனது பணி முன்னெடுப்புக்கால வரலாற்றில், இம்முறை மன்னார் மறைமாவட்டத்தின் வவுனியா மறைக்கோட்டப் பங்குகளில் முதன்முறையாக காலடி பதித்துள்ளமையை எண்ணி மகிழ்ச்சி கொண்டனர். தாங்கள் சந்தித்துப் பார்வையிட்ட வவுனியா மறைக்கோட்ட 3 பங்குகளின் 8 அன்பியக் குழுக்களும், பங்குத்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கைகோர்த்து சகோதர உணர்வுடன் இயேசுக்கிறிஸ்துவின் அன்பின் அரசை தங்கள் பங்குகளில் வெளிப்படுத்தி, பங்கேற்கும் சமூகமாகத் தங்களை அன்பிய வளர்ச்சியூடாக வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு அன்பியங்களும் தேசிய குழுவினரைத் தங்கள் அன்பியத்தில் ஆண், பெண், யுவதியர், இளைஞர், சிறுவர் எனப் பெருந்திரளாக ஒன்றுகூடி வரவேற்றனர். நடனம், பாடல் இசைத்து, மாலை அணிவித்து, மலர்ச்செண்டு வழங்கி, உள்ளப் பூரிப்போடு வரவேற்று அழைத்துச்சென்றனர். அத்துடன் ஒவ்வொரு அன்பியங்களும் 7 படி இறைவார்த்தை பகிர்வின் முறை வழி கற்றுணர்ந்து செபித்தனர். தம் வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். சிறுவர்களின் பங்களிப்பும், அவர்கள் செபித்த முறையும் தங்களை மெய்மறக்கச் செய்ததென தேசியக் குழுவினர் ஆச்சரியத்தோடு தெரிவித்தனர்.

இந்த அன்பிய வழிபாட்டில் பங்குபற்றிய அனைவரும் பார்வையாளர்களாக அல்லாது முழுமையாகப் பங்களிப்புச் செய்தனர். ஒவ்வொரு குழுவிலும் இறைவார்த்தை அனுபவப் பகிர்வின்போது மக்கள் தாம் பெற்றுக்கொண்ட மனமாற்ற, புதுவாழ்வு அனுபவத்தை வெளிப்படுத்தினர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற தேசிய குழுவினர், ஆசிய நாடுகளில் அன்பியத்தின் உண்மைத் தன்மையை அடையாளப்படுத்தும் தளமாக இப்பகுதி அன்பியங்கள் காணப்படுகிறது எனப் பாராட்டினர்.

### 2ஆம் நாள் அமர்வு – 11.07.2017
### மடுத்தியான இல்லம்

மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவினால் காலை 9.00 மணிக்கு இலங்கை தேசிய அன்பியக்குழு உறுப்பினர்களுக்கு மடு தியான இல்லத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி. அலெக்ஸ்சாந்தர் ஆரோக்கியம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. தேசியக் குழுவின் 2ஆம் நாள் அமர்விற்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, கொழும்பு துணை ஆயரும், அன்பிய தேசியக் குழுத் தலைவருமான மேதகு இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, தேசியக் குழு இயக்குனர் அருட்பணி. லைலி பெர்னாண்டோ ஆகியோரும் வருகைதந்திருந்தனர்.

ஆயர்களுக்கும், தேசிய இயக்குனருக்கும் மற்றும் தேசியக் குழுவின் செயலாளர் நிமால் பெரேரா, பொருளாளர், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், காலி, சிலாபம் ஆகிய மறைமாவட்ட இயக்குனர்கள், பதினொரு மறைமாவட்டங்களிலிருந்து வருகைதந்திருந்த 31 தேசிய குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாலை அணிவித்து, பூச்செண்டு வழங்கி வரவேற்பு வழங்கப்பட்டது. கொடி ஏற்றும் நிகழ்வைத் தொடர்ந்து இவர்கள் பவனியாக மண்டபம் வந்தனர். மண்டபத்தில் மங்கள விளக்கேற்றப்பட்டு இறைவணக்கத்துடன் தேசிய அன்பியக் கூட்டம் ஆரம்பமானது.

மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அலெக்சாந்தர் ஆரோக்கியம் அடிகளார் பல்வேறு மறைமாவட்டங்களில் இருந்து பயணத்தை மேற்கொண்டு ஆர்வத்தோடு மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகைதந்திருந்த தேசிய அன்பியக் குழுவினரை வரவேற்று வரவேற்புரை வழங்கினார்.

முதல் நிகழ்வாக மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும் மன்னாப் பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார், **"அன்பியங்களை பல்சமய சமூக உறவில் கட்டியெழுப்பி, நற்செய்தி பணிபுரிய தூய யோசவ்வாஸ் அடிகளாரை பின்தொடர்வோம்"** என்னும் தலைப்பில் இரண்டு மணிநேர உரையாற்றினார். இவ்வுரையின் சிங்கள மொழிபெயர்ப்பை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை வழங்கினார். பல்லூடகக் காணொளியின் (Multi Media Presentation) உதவியுடன் இந்த உரை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய உரையின் பின்னர் ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் ஆகியோர் தமிழ் நேசன் அடிகளாரின் உரையினால் ஆட்கொள்ளப்பட்டு பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர். தூய யோசவ்வாஸ் அடிகளார் மக்களைத் தேடிச்சென்று அயராது பணியாற்றினார். அதேபோன்று இன்றைய திருநிலை, பொதுநிலைப் பணியாளர்களும் செயலாற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தினர். அருட்பணி. தமிழ் நேசன் அடிகளாருக்கு பாராட்டும் புகழாரமும் வழங்கினர். பொருள்மிக்க பொருத்தமான இந்த உரையினை ஏற்பாடு செய்த மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி. ஆரோக்கியம் அடிகளாரையும் அவர்கள் பாராட்டினர்.

இலங்கைத் தேசிய கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்வின் ஆசி உரையினை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வழங்கினார். அதில் அவர், "மன்னார் மறைமாவட்டத்திற்குத் தேசிய குழு வருகை தருவதையிட்டு மகிழ்ச்சியடைந்தோம். ஏனெனில் தேசியக் குழுவின் வருகையும், அன்பியங்களின் தரிசிப்பும் வவுனியா மறைக்கோட்டத்திற்கு ஓர் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று கருதுகின்றோம். தேசியக் குழுவை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், "அன்பிய ஆணைக்குழு மன்னார் மறைமாவட்டத்தின் அன்பிய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றி வருகிறது. மேலும் இம்முறை 3 பங்குகளில் 8 அன்பியக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு தேசியக் குழுவினரின் சந்திப்புக்கு உரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் மற்றும் அன்பிய மத்திய குழுவினால் இந்த ஆயத்தங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அத்துடன் கோமரசன்குளம், மகாறம்பைக்குளம், திருநாவற்குளம், வேப்பங்குளம், தவசிகுளம், கூமாங்குளம், தாஸ்கோட்டம், சிதம்பரபுரம் என்னும் குளங்கள், புரம், கோட்டம் என்னும் பெயர் கொண்ட இடங்களில் மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு புகுந்து கடந்த ஆறு மாதங்களாக பயிற்சிகள் கொடுத்து, அப்பகுதி மக்களிடம் கிறிஸ்தவ வாழ்வின் கலாசாரத்தைக் கட்டி எழுப்பியுள்ளதைக் காணமுடிகிறது" என்றார்.

இலங்கை தேசிய அன்பியக் குழுவின் தலைவர் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் உரையாற்றுகையில், ஒவ்வொரு வருடமும் நடைபெறும் தேசியக் கூட்டத்தொடரின்போது மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு சிறப்பாக செயற்பாட்டு அறிக்கையும் கானொளிக்காட்சியும் வழங்கி வருகிறது. இம்முறையும் இந்த ஆணைக்குழு மிகவும் சிறப்பாக அன்பியக் குழுக்களை உருவாக்கி, ஆசியக் கண்டத்திற்கு எடுத்துக்காட்டான அன்பிய வாழ்க்கையை அடையாளப்படுத்தியுள்ளது. மற்ற மறைமாவட்டங்களும் கற்றுக்கொள்ளும்விதமாக அன்பியக் குழுக்களில் அன்பிய கலாசாரம் வெளிப்படும்படியாக பெருமுயற்சி கொண்டு உருவாக்கப் பயிற்சிகளை வழங்கியுள்ளனது எனப் பாராட்டினார்.

தாம் பார்வையிட்ட அன்பியங்களில், இந்துமத சிறார்கள் பங்குபற்றி பகிர்ந்து கொண்டமை குறித்து தேசியக் குழுவினர் மிகவும் பாராட்டினர். எட்டு அன்பியக் குழுக்களையும் சந்தித்து பார்வையிட்ட தேசியக் குழுவினர் ஆய்வறிக்கையையும் வழங்கினர்.

தரிசிக்கப்பட்ட அன்பியங்களின் விபரம் வருமாறு:

1. தாஸ்கோட்டம் - வேப்பங்குளப் பங்கு
2. தவசிகுளம் - வேப்பங்குளப் பங்கு
3. கூமாங்குளம் - வேப்பங்குளப் பங்கு
4. மகாறம்பைக்குளம் - வவுனியாப் பங்கு
5. திருநாவற்குளம் - வவுனியாப் பங்கு
6. கோமரசன்குளப் பங்கு
7. கோமரன்குளம் - 2ம் அன்பியக்குழு
8. கோமரசன்குளம் - சிதம்பரபுரம்

தேசியக் குழுவினர் 10.07.2017 அன்று மாலை 4.30 மணிக்கு 8 அன்பியங்களைக் 8 குழுக்களாகச் சென்று தரிசித்தனர். 11.07.2017 அன்று இடம்பெற்ற அமர்வில் இக்குழுவினர் தமது சந்திப்புக் குறித்து கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். "வரோட்" நிலைய புணர்வாழ்வு மையத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியமை பயனுள்ள அனுபவமாக அமைந்திருந்ததாக இவர்கள் குறிப்பிட்டனர்.

தேசிய குழுக் கூட்ட நிகழ்வில், காலை வேளைகளில், 7 படி இறைவார்த்தைப் பகிர்வு இரு மொழி குழுக்களாகவும், தொடர்ந்து நடந்தது. மருதமடு அன்னை திருத்தலத்தில் தமிழ், சிங்கள மொழிகளில் திருப்பலி நடைபெற்றது. செபமாலையும் இடம்பெற்றது. தேசியகுழு ஒன்றிணைந்து ஆயர் தலைமையில் திருப்பலியை நிறைவேற்றியமை சிறப்பான ஆசீராக அமைந்தது.

### 3ஆம் நாள் அமர்வு – 12.07.2017
### மடு மற்றும் மன்னார் மறைக்கோட்டம்

தேசிய குழுவின் 3ஆம் நாள் (12.07.2017) அமர்வின்போது காலையில் மருதமடு அன்னை திருத்தலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பட்டது. பின்னர் தூய யோசவ்வாஸ் புனிதர் வாழ்ந்த பறப்பாங்கண்டல் பங்கிற்கு இக்குழுவினர் விஜயம் மேற்கொண்டனர். அங்கு அன்பிய இணைப்பாளர்களின் அன்பான வரவேற்பு இக்குழுவினருக்கு வழங்கப்பட்டது. முன்பள்ளி மாணவர்கள் பாசத்தோடு மாலையிட்டு பூச்செண்டு கையளித்து மகிழ்வோடு வரவேற்றமை தேசியக் குழுவிற்கு மகிழ்ச்சி அளித்தது. சுமார் 40 உறுப்பினர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. அன்பிய வளர்ச்சி குறித்த உரையாடலும் இங்கு இடம்பெற்றது. பறப்பாங்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி. மரியதாஸ் கொட்வின் கமிலஸ் (IVD) அடிகளார் இந்நிகழ்வுகளில் பங்கேற்று பேருதவி புரிந்தார்.

தொடர்ந்து மாந்தை லூர்து அன்னை திருத்தலம் சந்திக்கப்பட்டது. தேசிய குழுவினரை மாந்தைப் பங்குத்தந்தை சீமான் மரியதாசன் அடிகளார் இன்முகத்தோடு வரவேற்றார்.

தூய யோசவ்வாஸ் அடிகளார் வந்திறங்கிய புனித இடமாகிய மன்னார் சாந்திபுரம் பங்கில் உள்ள சவுத்பார் என்ற இடத்திற்கும் இவர்கள் விஜயம் செய்தனர். சாந்திபுரம் பங்குத்தந்தை அருட்பணி. யூட் ஞானராஜ் குரூஸ் அடிகளார் தேசியக் குழுவினரைப் பங்குமனையில் வரவேற்றார். தூய யோசவ்வாஸ் அடிகளார் வந்திறங்கிய சவுத்பார் கிராமத்தில் அமைந்துள்ள திருத்தலத்திற்கு அவரே இக்குழுவினரை வழிகாட்டி அழைத்துச்சென்றார்.

### பேசாலை தூய வெற்றிநாயகி அன்னை ஆலயம்

3ஆம் நாள் காலை 11.30 மணியளவில் பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி. அலெக்சாந்தர் சில்வா அடிகளார் பேசாலை தூய வெற்றிநாயகி அன்னை ஆலயத்தில் இலங்கை தேசிய அன்பியக் குழுவை வரவேற்றார்.


பேசாலைப் பங்கின் 65 அன்பிய இணைபாளர்களுடன் கொளுத்தும் வெயிலில் இக்குழுவினருக்காகக் காத்திருந்தனர். இக்குழுவினர் வருகைதந்ததும் அவர்களை மேளதாள, நாதஸ்வர, இசை காற்றோடு கலந்துவர வரவேற்றனர். பொட்டிட்டு, அனைவருக்கும் மணங் கமழ மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து பவனியாக அழைத்துச்சென்றனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# கறிற்றாஸ் - வாழ்வுதயம் சமாதான முயற்சிகளை அன்றுதொட்டு இன்றுவரை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது

### மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை



கறிற்றாஸ் வாழ்வுதயம் அமைப்பானது சர்வமத ஒன்றிப்பு மற்றும் சமாதான முயற்சிகளை அன்றுதொட்டு இன்றுவரை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது என மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் குறிப்பிட்டார்.

கடந்த யூலை மாதம் 21ஆம் திகதி "கலை வழி அமைதி" எனும் கருப்பொருளில் கறிற்றாஸ் - வாழ்வுதய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கலைநிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தமது உரையில், இன்று எமது நாட்டில் யுத்தம் இல்லையென்றாலும் நாம் பல பிரச்சினைகளைத் தாங்கியே வாழ்ந்து வருகின்றோம். மக்களுக்கிடையில் பல்வேறுவிதமான கருத்து வேறுபாடுகளும், பிணக்குகளும் தொடர்ந்து இருந்தவண்ணமே உள்ளது. இவ்வாறான சூழலில் இப்படியான சமாதான முன்னெடுப்பு நிகழ்வுகள் எம் எல்லோரையும் ஒருமனப்பட்டவர்களாக வாழத் தூண்டுகின்றது.

கறிற்றாஸ்-வாழ்வுதயம் இவ்வாறான சர்வமத ஒன்றிப்பு, சமாதான முயற்சிகளை அன்றுதொட்டு இன்றுவரை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் கறிற்றாஸ்-வாழ்வுதய இயக்குனர் அருட்பணி ம. ஜெயபாலன் அடிகளார் தமது பணியாளர்களுடன் கரம் இணைந்து பல மனித நேயப்பணிகளை மதிநுட்பமாகத் திட்டமிட்டு மக்கள் பணியினை ஆற்றிவரும் வேளையில், இக் "கலை வழி அமைதி" நிகழ்வையும் சிறப்பாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியுள்ளார். இந்நிகழ்வு இவ் அமைப்பின் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதற்கு சான்றாக அமைகின்றது.

இப்பணியகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் கூறி நிற்கின்றேன். கறிற்றாஸ் - வாழ்வுதயம் மேலும் பல முன்னேற்றங்களையும் கண்டு வளர எனது ஆசீகளையும் வழங்குகிறேன் என்றார்.

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவராக மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. டேவிட்சன் (ஜெறாட்) தெரிவு



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2017 /2021ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத்தின் உபதலைவராக மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு டேவிட்சன் (ஜெறாட்) அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2017 / 2021ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டமானது அகில உலக (FIFA) மற்றும் ஆசிய (AFC) உதைபந்தாட்ட சம்மேளனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கடந்த 01.07.2017 அன்று காலை 10.00 மணியளவில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தற்போதைய தலைவராக இருந்த திரு அனுர டி சில்வா தலைமையிலான குழுவும், முன்னாள் தலைவர் திரு ரஞ்சித் றொட்றிகோ தலைமையிலான குழுவும் போட்டியிட்டன. இரு குழுக்களும் ஓரளவு சமநிலையில் பலப்பரீட்சை காண்பித்து களத்தில் இருந்தன. வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையை வடக்குக் கிழக்கு மாகாண லீக்குகள் கொண்டிருந்தன. இலங்கையில் 63 லீக்குகள் உள்ளன. இதில் வடக்கில் 09 லீக்குகளும், கிழக்கில் 08 லீக்குகளும் உள்ளன. இந்த 17 லீக்குகளும் ஒற்றுமையாக இணைந்து இலங்கையின் வெற்றியைத் தீர்மானித்தன. இவை அனுர டி சில்வாவை ஆதரித்து 106க்கு 79 என்ற வாக்குகளின் அடிப்படையில் தலைமைத்துவத்தைத் தீர்மானித்துள்ளது.

இத்தேர்தலில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு டேவிட்சன் (ஜெறாட்) அவர்கள் உப தலைவர் பதவிக்கு போட்டியிட்டு இலங்கை முழுவதுமாக பலமாக இருந்த எதிரணியாகிய றஞ்சித் றொட்றிகோ அணியைத் தோற்கடித்து உப தலைவராகத் தெரிவாகி மன்னார் மாவட்டத்திற்கும் வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

ஜெறாட் அவர்கள் மன்னார் பனங்கட்டுக்கொட்டுக் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் நகர பிதா அமரர் திரு ஞானப்பிரகாசம் (அருமை) அவர்களின் புதல்வராவார். இவர் தனது இளமைக்காலத்தில் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் அணிக்காக விளையாடிய ஒரு சிறந்த வீரராவார். மன்னார் மாவட்ட அணிக்கு நீண்ட காலம் தலைவராகச் செயற்பட்டார். 1999, 2001, 2002 ஆகிய காலப்பகுதியில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டப்போட்டியில் வடகிழக்கு மாகாண அணியில் சிறப்பாக ஆடி 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் 2003/2004ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இவ் இணைந்த மாகாண அணிக்கு தலைவராகச் செயற்பட்டு 3ஆம் இடத்திற்கான தேசிய மட்டத்தில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

வட மாகாணம் பிரிக்கப்பட்டபின் 2011ஆம் ஆண்டில் வட மாகாணம் 3ஆம் இடத்தைப்பெற இவர் உதவினார். அத்துடன் 2012ஆம் ஆண்டில் இவரது தலைமையின்கீழ் வட மாகாண அணி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப்பெற்று வரலாற்றுச் சாதனை படைத்ததும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாது இவர் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவராக 2012 முதல் 2014 வரையும் கௌரவ தலைவராக 2015 முதல் இன்றுவரையும் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு மன்னார் மாவட்டத்தின் உதைபந்தாட்டத்தைச் சிறப்பாக வளர்க்க மிகவும் பலத்த சவால்களின் மத்தியில் அரும்பாடுபட்டு வருகின்றார்.

உண்மைத்தன்மையும் நேர்மைத்தன்மையும் வெளிப்படு தன்மையும் விடாமுயற்சியும் கொண்ட சிறந்த தலைவரைக் கொண்டுள்ள மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கானது இன்று பெருமை கொள்கிறது. இவரது தலைமைத்துவக் காலத்தில்தான் மன்னார் மாவட்டத்தில் மாதத்திற்கொரு உதைபந்தாட்டப்போட்டியும் விளையாடும் கழகங்களின் எண்ணிக்கை 42 ஆகப் பாரிய அளவில் அதிகரித்துள்ளமையும் பாராட்டத்தக்கது.

எனவே இவ்வளவு தகுதியும், அனுபவமும் கொண்ட இவரது தேசிய சங்கத்தின் உப தலைவர் பதவி சிறக்க இறையாசீர் வேண்டி மன்னார் மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்கள் இரசிகர்கள் சார்பில் லீக் நிர்வாகம் வாழ்த்துகின்றோம். இவரது வெற்றிக்கு வாக்களித்த சகல லீக்குகளுக்கும் சிறப்பாக வடக்கு கிழக்கு லீக்குகளுக்கும் வெற்றியை உறுதிசெய்த பெரும் மதிப்பிற்குரிய திரு. கேளி சில்வைரா மற்றும் வைத்தியர் மணில் பெனாண்டோ யாவருக்கும் விசேட நன்றிகள்.

**தகவல் - ப. ஞானராஜ் - மன்னார் லீக் செயலாளர்.**

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்திரு. அல்பன் அடிகளாருக்கு முதியோர் சங்கங்களின் சமாசம் முன்னெடுத்த பாராட்டு வைபவம்!





மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தால் இச்சமாசத்தின் இயக்குநர் அருட்திரு. அல்பன் இராஜசிங்கம் (அ.ம.தி) அவர்கட்கு அவரது துறவற வாழ்வில் 50 ஆண்டு நிறைவையொட்டிய பாராட்டு வைபவம் கடந்த 14.06.2017 அன்று குடும்பநலப் பணியகத்தில் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது.

சமாசத்தின் அனைத்து அங்கத்தவர்களும் விழா நாயகருக்கு மாலை அணிவித்து பாடல்களுடன் அவரை மண்டபத்துக்குள் அழைத்து வந்தனர். சமாசத்தின் தலைவர் திரு. எஸ். ஏ. மிராண்டா அவர்கள் உரையாற்றுகையில் 1967ஆம் ஆண்டு களுத்துறையில் ஆரம்பித்த துறவற வாழ்வுப் பயணத்தில் 35 வருடங்களை நமது மன்னார் மறைமாவட்டத்திலேயே எமது விழாநாயகர் சேவையாற்றுவதில் அர்ப்பணித்திருக்கிறார் என்பதை எண்ணும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார். மேலும் அருட்திரு. அல்பன் இராஜசிங்கம் அடிகளார் தலைமன்னார், பேசாலை பங்குகளில் பிரச்சினையான காலங்களில் ஏழைகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பலவிதமான சேவைகளைச் செய்து வந்தமை பாராட்டுதலுக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

மறைமாவட்ட ஆயரின் வேண்டுகோளுக்கு இணங்க அனைத்து மக்களும் இடம்பெயர்ந்திருந்த வேளையிலும்கூட ஒருசில மக்களுடன் பங்குகளில் தங்கியிருந்து பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் அருட்பணிகள் ஆற்றிவந்தார். பள்ளிமுனைப் பங்கில் கடமையாற்றும்போது தெய்வாதீனமாக ஷெல்லடியிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பிப் பிழைத்துள்ளார்.

அருட்பணி. அல்பன் அடிகளாரின் சேவைத்திறனை அறிந்த மறைமாவட்ட ஆயர் அடிகளாரை வாழ்வுதயத்தின் இயக்குனராக நியமித்தார். அப்பணியில் அடிகளார் 10½ வருடங்களாக தன்னலங்கருதாது அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்தார். அடிகளாரை அண்டிவந்த ஏழை மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து அவர்களின் குறைகளைப் போக்கினார். அவ்வமையம் தேவைகளுக்கேற்ற பிரகாரம் பல்வேறு கருத்திட்டங்களையும் குறைசாராக் கல்விப் பயிற்சிகளையும் திட்டமிட்டு நடாத்தி மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார் என்று தனதுரையில் குறிப்பிட்டதோடு, மேலும் பல ஆண்டுகள் இறைவன் சேவையில் ஈடுபட்டிருக்க, தூய ஆவி அவரை வழிநடத்தவேண்டும் என்றும் இறைவன் அன்னாருக்கு ஆன்ம, சரீர நலத்தை நிறைவாக அருளவேண்டும் என்றும் வேண்டி வாழ்க வாழ்க என வாழ்த்தி உரையை முடித்தார்.

தொடர்ந்து விழா நாயகருக்கு பொன்னாடை அணிவித்து, வாழ்த்துப்பாக்களை இசைத்து, முதியோர் நடனமாடி விழாநாயகரை மகிழ்வித்தமை மிகவும் சிறப்பாக இருந்தது.

விழாநாயகர் தமது உரையில் கடந்த 50 ஆண்டுகளாக இறைவன் தன்னை வழிநடத்தி வந்துள்ளார் என்றும் அதற்காக இறைவனுக்கும் நன்றி கூறுவதாகவும் எத்தனையோ ஆபத்துக்களிலும் இறைவனுடைய அருட்கரம் தன்னை காப்பாற்றியுள்ளதை தான் உணர்ந்ததாகவும் நன்றிப் பெருக்குடன் எடுத்தியம்பினார்.

தானும் ஒரு பலவீனன் என்பதால் தனக்காகவும் எமது செபங்களில் வேண்டிக்கொள்ளும்படி மிக அன்பாகவும் அமைதியாகவும் கேட்டுக்கொண்டதோடு, இவ்வைபவத்தை ஏற்பாடு செய்த சமாசத்துக்கும் தமது நன்றிகளைக் கூறி உரையை நிறைவுசெய்து எல்லோருக்கும் தமது ஆசீரை வழங்கினார்.

***தகவல் : திரு. ம. எமில் குலாஸ்***

## வங்காலையில் அன்பிய வாரம்

வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் தூய ஆவியானவர் திருவிழா அன்று பங்குத்தந்தை அருட்திரு. எஸ். ஜெயபாலன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. றொசான் அடிகளார் இருவரும் சேர்ந்து அன்பியக் கொடியை ஏற்றி அன்பிய வாரத்தை ஆரம்பித்து வைத்தார்கள். திருப்பலியையும் ஒப்புக்கொடுத்தார்கள். அந்த வாரம் முழுவதும் அன்பிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அன்பிய வாரத்தின் நிறைவுநாளான மூவொரு இறைவனின் திருவிழா அன்று உதவிப்பங்குத்தந்தை அருட்திரு. றொசான் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இத்திருப்பலியில் அன்பிய ஊக்குவிப்பாளர்கள் தமது அர்ப்பண வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்துக்கொண்டார்கள். அதனை திருமதி அந்தோனிக்கம் வாஸ் நிறைவேற்றிவைத்தார். மாலை 6.00 மணியளவில் பகிர்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது ஆடல் பாடல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அருட்சகோதரன் சதாஸ்கர் தலைமையில் வினா விடை நிகழ்வும் இடம்பெற்றது.

**தகவல்: ஒருங்கிணைப்பாளர் - ம. அந்தோனிக்கம் வாஸ்.**

### புனித யோசவ்வாஸ் ஆண்டில் அவருடைய அடிச்சுவட்டில் பயணிக்கும் அருட்சகோதரிகள்

# சலேசிய அருட்சகோதரிகளின் இல்லத் தரிசிப்பு அனுபவங்கள்





இறை மனிதத் தொடர்பின் உன்னத அடையாளம் பகிர்தலே ஆகும். இறைவன் மனிதனோடும் மனிதன் இறைவனோடும் கொண்டுள்ள தொடர்பானது தனிப்பட்ட வாழ்வில் பெற்ற இறையனுபவங்களை பிறரோடு பகிர்ந்துகொள்வதன் மூலமும் தெய்வீக உறவில் நிலைத்திருப்பதன் மூலமுமே வெளிப்படுத்தப்படுகின்றது.

அன்பைப் பகிர்வதால் வாழ்வும், அறிவைப் பகிர்வதால் ஆளுமையும், பண்பைப் பகிர்வதால் புகழும், பாசத்தைப் பகிர்வதால் உறவும் வளர்வதைப்போல் இறையனுபவத்தையும் வாழ்வையும் பகிரும்போது நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனோடு கொண்டிருக்கும் உறவையும் ஒன்றிப்பையும் உரமூட்டிக்கொள்ள முடியும்.

இந்த வகையில்தான் புனித அக்குவைனஸ் உயர்கல்விக் கல்லூரியில் உயர்கல்வி பயிலும் அருட்சகோதரிகள் தாம் பெற்ற இறையனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்காகவும் புதிய அனுபவங்களைப்பெற்று தம் வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்வதற்காகவும் ஆன்மீக வாஞ்சையால் உந்தப்பட்டவர்களாக, ஆன்மீகத் தாகத்தோடு இருந்த இறைமக்களின் இல்லங்களை நாடிப் பயணித்தார்கள்.

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற தமிழ்ச் சான்றோரின் வார்த்தைக்கிணங்க ஆயனில்லா ஆடுகள்போல் இருந்த இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றி, விசுவாசத்தில் அவர்களை ஆழப்படுத்தி, வழிநடத்தினார் புனித யோசவ்வாஸ் அடிகளார். அவருடைய காலடித் தடங்கள் பதிந்த புனித மண்ணாகிய புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த சிலாபம் மறைமாவட்டத்தின் வனத்த வில்லுப் பங்கு 10 உப பங்குகளை உள்ளடக்கிய ஏறக்குறைய 700 கத்தோலிக்க குடும்பங்களைக்கொண்ட ஒரு பெரிய பங்காகும்.

வறண்ட காலநிலை இந்தப் பங்கின் பல உப பங்குகளில் வலுவாக உணரப்பட்டாலும், இயற்கையின் அமைதியான சூழ்நிலையானது பெரும்பாலும் கடற்தொழிலையும், விவசாயத்தையும் தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ள இக்குடும்பங்களுக்கு கிடைத்த சிறந்த வரப்பிரசாதமாகும்.

எமது நாட்டின் அப்போஸ்தலரான புனித யோசவ்வாஸின் நற்செய்தி ஆர்வம் எம்மிடையேயும் அதிகரிக்க வேண்டும். வாழ்க்கையின் பல்வேறுபட்ட சவால்களுக்கு இந்த மக்கள் முகங்கொடுத்து வாழ்கின்றனர். சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீக ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றனர். அடிப்படை வசதிகளே சரியாகக் கிடைக்காத நிலையில், சமூகத்தின் பாதையில் மறைக்கப்பட்டு, விளிம்புகளின் எல்லையில் இந்த மக்கள் வாழ்கின்றனர். இந்த மக்களோடு சில நாட்கள் தங்கியிருந்து பணி செய்வதில் பல சவால்கள் இருந்தன என்பது உண்மையே.

ஆயினும் இறைமகன் இயேசுவிடத்தில் பொங்கி வழிந்த அன்புத்தீயால் தூண்டப்பட்டவர்களாக நாம் இருந்தோம். நாம் பெற்ற விசுவாசத்தை, இறையன்பை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற பேராவலோடு, மிகவும் குறுகிய காலத்தில் அனைவரது இல்லங்களையும் தரிசித்தோம். மக்கள் மத்தியில் விசுவாசத்தைப் பரப்பியதுடன் பல புதிய அனுபவங்களையும் பெற்றுக்கொண்டோம்.

இயேசு நற்செய்தியை அறிவிப்பதற்கு தமது சீடர்களை இருவர் இருவராக அனுப்பியது போன்று நாமும் இருவர் இருவராக அனுப்பப்பட்டோம். பங்குத் தந்தையரினதும் அப்பங்கின் பணிபுரியும் அருட்சகோதரிகளினதும் பூரண ஒத்துழைப்புடனும் உப பங்குகளின் தலைவர்களின் வழிகாட்டுதலுடனும் எமது பணியை ஆரம்பித்த நாம், பல சந்தர்ப்பங்களில் நெடுந்தூரங்களைக் கடந்து செல்வதற்கு மிகச்சிறிய திறந்த வாகனங்கள் மூலமும் மோட்டார் சைக்கிள்கள் மூலமும், முச்சக்கர வண்டிகள் மூலமும் பயணித்ததுடன் புனித யோசவ்வாஸ் பயணித்த ஒற்றையடிப்பாதைகளில் கால்நடையாகவும் பயணித்த அனைத்து மக்களின் இல்லங்களுக்கும் சென்று அவர்களை சந்தித்தோம்.

சொந்த மொழியில் தமது வாழ்க்கை அனுபவங்களை சொல்ல முடியாத துன்ப நிகழ்வுகளை வெளிப்படுத்தக் காத்திருந்த மக்களுக்கு, எமது பிரசன்னம் உண்மையான மன அமைதியையும், ஆறுதலையும் ஏற்படுத்தியதை அவர்களின் மனம்திறந்த அனுபவப் பகிர்வின் மூலம் நாம் உணர்ந்துகொள்ள முடிந்தது. மக்களிடையே பல்வகைத் தேவைகள் இருப்பதை உணர்ந்துகொண்ட நாம் அவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக ஆலோசனைகளைக் கூறினோம்.

நாம் அந்த மக்களுக்கு இறைவனில் உறுதியான விசுவாசத்தை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை உணர்ந்தோம். அவர்களின் சொந்த மொழிகளில், அவர்களது சொந்த ஆலயங்களில் இளைஞர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள் என அனைவருக்கும் ஒன்றுகூடல்களை நடத்தினோம். இறைவார்த்தைப் பகிர்வு, மற்றும் இறைவழிபாடுகளை நடத்தி வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டோம். மக்களிடையே ஓர் ஒன்றிப்பும், மன அமைதியும் சந்தோசமும் ஏற்பட்டதை உணர்ந்துகொண்டோம்.

இம்மக்களுடன் தங்கியிருந்து பயணித்த இந்தக் குறுகிய காலப்பகுதியில் அம்மக்களின் சில நற்பண்புகளை நாமும் கற்றுக்கொண்டோம். இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் எளிமையான வாழ்க்கை முறை, இறைவனிடத்தில் கொண்டுள்ள மிக எளிமையான விசுவாசம் ஆகியன துறவற வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில் பயணிக்கும் எமக்கு சவாலாகவும், எடுத்துக்காட்டாகவும் இருந்தது. இம்மக்களின் வாழ்க்கைப் பயணம் எமக்கு சவாலாக இருந்தபோதிலும் எமது பிரசன்னம் அவர்களிடையே இறைவனைத் தேடும் ஆன்மீகத் தாகத்தை அதிகரித்ததோடு அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பலரின் இதயத்தில் இறையன்புத் தீ பற்றியெரிய இறைவன் எம்மை தமது கருவியாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறிந்து கொண்டோம்.

அன்றாட வாழ்க்கையின் பிரச்சனைகள், இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்கள், போரின் வடுக்கள் எனப் பல சுமைகளால் சேர்ந்துபோன மக்களின் துயர்படிந்த வரலாறுகளைக் கேட்டு இறைவார்த்தையின் ஒளியில் ஆறுதல் அளிக்க, வறுமையிலும் வளமையைக் கொண்டாட, இம்மக்களோடு சில நாட்கள் தங்கியிருந்தமை எமது துறவற வாழ்வில் எமக்கு கிடைத்த ஓர் அருமையான, அனுபவம் நிறைந்த சந்தர்ப்பம் என்றால் அதில் ஐயமில்லை.

சமூகத்தின் பல்வேறுபட்ட கோணங்களிலும் பாதிக்கப்பட்டு பின்தங்கிய நிலையில் வாழும் வனத்த வில்லுப்பங்கு மக்களுடனான எமது குறுகிய கால மறைத்தூதுப் பணியில், நாம் பெற்றுக்கொண்ட இறையனுபவங்களினால் வலுப்பெற்றுள்ளோம். தொடர்ந்தும் புனித யோசவ்வாஸின் பாதையில், கொழும்பு மறைமாவட்டத்தின் சில பங்குகளைத் தரிசித்து மக்களின் வேறுபட்ட அனுபவங்களுடன் எம்மை இணைப்பதன் மூலம் வாழ்க்கையின் யதார்த்தத்தை இன்னும் அதிகமாக உணர்ந்துகொள்ள முடியும் என நம்புகிறோம்.

எதிர்காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தில் மக்களை வலுப்படுத்தி, எம்மையும் இறையுறவில் ஆழப்படுத்தும் நோக்கில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இயேசுவைக் கொடுப்பதன் மூலம் இயேசுவின் அன்பையும் அமைதியையும் எங்கும், எப்போதும் பரப்பிடும் நோக்கில் தொடர்ந்தும் பயணிக்கின்றோம்.

### மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்வுதயம் (கறிற்றாஸ்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற


# ‘கலை வழி அமைதி’ நிகழ்வு



மன்னார் மறைமாவட்டத்தின் மனித நேய அமைப்பான வாழ்வுதயம் (கறிற்றாஸ் - மன்னார்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் ‘கலைவழி அமைதி’ என்ற கலைநிகழ்வு கடந்த யூலை மாதம் 21ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு கருங்கண்டல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

வாழ்வுதயம் இயக்குனர் அருட்தந்தை எம். ஜெயபாலன் அடிகளார் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், இலங்கை கறிற்றாஸ் செடக் (SEDEC) தேசிய இயக்குனர் அருட்பணி. மகேந்திர குணதிலக்க அடிகளார், யாழ்ப்பாணம் மறைமாவட்ட கியூடெக் இயக்குனர், திருகோணமலை மறைமாவட்ட எகட் இயக்குனர், கண்டி மறைமாவட்ட செற்றிக் இயக்குனர், அனுராதபுரம் மறைமாவட்ட செத்சவிய இயக்குனர் மற்றும் பௌத்த மத உயர் பீடாதிபதி சங்கைக்குரிய வல் பொல சரண அவர்களும், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை அடிகளார் அவர்களும், இன்னும் மன்னார் மறைமாவட்ட பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், மற்றும் முன்னைநாள் வலயக்கல்விப் பணிப்பாளர்களாகிய திரு. ஜேக்கப், திரு. ஆபேல் றெவல் மற்றும் கிராமிய சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், கிராமப் பெரியார்கள் போன்றோரும், வாழ்வுதய இலக்கு கிராம பயனாளிகள் என 3000த்திற்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து சிறப்பித்தனர்.



வாழ்வுதய இயக்குனர்
அருட்திரு. எம். ஜெயபாலன் அடிகளார்

இந்நிகழ்விற்கு வருகைதந்த பிரதம அதிதி, கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் போன்றோர் மாலை அணிவித்து தமிழ்ப் பாரம்பரிய இன்னிய அணிவகுப்பு, சிங்கள பாரம்பரிய கண்டி நடனங்களோடு கறுக்காக்குளம் பிரதான வீதியிலிருந்து கருங்கண்டல் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர். மங்கல விளக்கேற்றல் நிகழ்வின்பின் கறிற்றாஸ்-வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. ம. ஜெயபாலன் அடிகளார் **“எல்லோரும் சமாதான தூதுவர்களாய் வாழ்வோம்”** என்ற அழைப்பை விடுத்து வரவேற்புரையினை நிகழ்த்தினார்.

பின்னர் சர்வமதத் தலைவர்கள் பல்லின, சமய, இளைஞர்கள் பெரியோர்கள் இணைந்து அரங்கில் வடிவமைக்கப்பட்ட சமாதானப் புறாவிற்கு ஒளியேற்றியதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பல முக்கியஸ்தர்கள் உரை நிகழ்த்தினர். அந்த வகையில் இலங்கை கறிற்றாஸ் தேசிய இயக்குனர் அருட்பணி. மகேந்திர குணதிலக்க அடிகளார் உரையாற்றும்போது, கறிற்றாஸ் - வாழ்வுதயம் இவ்வாறான சமாதான முன்னெடுப்பிற்காக முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருவதாகவும், தேசிய ரீதியில் பார்க்கும்போது கறிற்றாஸ்- வாழ்வுதயம் சமாதான செயற்பாடுகளுக்கு கூடியளவு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் இதற்கு அரும்பாடுபட்டு உழைக்கும் இயக்குனர் அருட்பணி ம. ஜெயபாலன் அடிகளாருக்கும் பணியாளர்களுக்கும் தனது பாராட்டினையும் நன்றிகளையும் தமது உரையில் தெரிவித்தார்.

கலை நிகழ்வுகள் மிகவும் தரமான முறையில் முன்னாயத்தம் செய்யப்பட்டவையாக அமைந்திருந்தன. இதில் கிராமிய நடனம், இரத்தினபுரி மறைமாவட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள நடனங்கள், சிறுவர் உரிமை நடனம், சக்கர நாற்காலியின் சாதனைகள், வில்லுப்பாட்டு, வேப்பிலை நடனம், நாட்டுக் கூத்து, நாடகம், இசையும் அசைவும் போன்ற பல பாரம்பரிய நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : நிர்வாக அலுவலர், கறிற்றாஸ் - வாழ்வுதயம், மன்னார்.**

இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்த வாழ்வுதயம் இயக்குனருக்கும், பணியாளர்களுக்கும் மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

(இந்நிகழ்வில் நிழற்படங்களை 8ஆம் பக்கத்தில் காணலாம்)

# புனித யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு
# மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம்
# 'கலையருவி' நடாத்தும் போட்டிகள்

### கவிதைப் போட்டி (திறந்த போட்டி)

- வயதெல்லை கிடையாது.
- தலைப்பு : **'பணி வாழ்வில் தடம் பதித்த வாஸ் அடிகள்'**
- தாளின் (A4) ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும்.
- மரபுக் கவிதையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் கவிதைகள் வெற்றியாளரின் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்
- கவிதைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் : செப்ரம்பர் 22ஆம் திகதி (வெள்ளி).

பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்.

### கட்டுரைப் போட்டி (திறந்த போட்டி)

- வயதெல்லை கிடையாது.
- தலைப்பு : **'குடும்பங்களைக் கட்டி எழுப்பிய தூய யோசவ்வாஸ்'**
- 400 – 500 சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகள் வெற்றியாளரின் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- கவிதைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் : செப்ரம்பர் 22ஆம் திகதி (வெள்ளி).
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்

### பிரிவுகள்

**Iஆம் பிரிவு : 3ஆம், 4ஆம், 5ஆம் தரங்கள்.**
**IIஆம் பிரிவு : 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்கள்.**
**IIIஆம் பிரிவு : 9ஆம், 10ஆம், 11ஆம் தரங்கள்.**
**IVஆம் பிரிவு : 12ஆம், 13ஆம் தரங்கள்.**

### சித்திரப் போட்டி (மாணவர்களுக்கானது)

- அனைத்துப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் பங்கெடுக்கலாம்.
- தலைப்பு : **'புனித யோசவ்வாஸ் செய்த புதுமை'**
- சித்திரங்கள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் : செப்ரம்பர் 22ஆம் திகதி (வெள்ளி).
- இத்திகதிக்கு முன்னர் வசதியான ஒரு நாளில் பங்குகளில் பங்குத்தந்தையின் மேற்பார்வையில் இச்சித்திரப் போட்டியை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவர்களின் சித்திரங்களை பங்குத்தந்தை எமது மையத்திற்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.
- மறைமாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சித்திரங்கள் வெற்றியாளரின் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்.

### பேச்சுப் போட்டி (மாணவர்களுக்கானது)

Iஆம் பிரிவு : 3 - 5 நிமிடங்கள்
IIஆம் பிரிவு : 4 - 6 நிமிடங்கள்
IIIஆம் பிரிவு : 5 - 7 நிமிடங்கள்
IVஆம் பிரிவு : 6 - 8 நிமிடங்கள்

- தலைப்பு : **'மறை காத்த மாவீரன்'**
- போட்டி நடைபெறும் இடம் : கலையருவி, நாள்: செப்ரம்பர் 30ஆம் திகதி (சனி), நேரம் : காலை 9.00 மணி.
- இத்திகதிக்கு முன்னர் வசதியான ஒரு நாளில் பங்கு மட்டத்தில் பங்குத்தந்தையின் மேற்பார்வையில் இப்போட்டியை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களை இப்போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : செப்ரம்பர் 22ஆம் திகதி (வெள்ளி).
- மறைமாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்.

### பாடல் போட்டி (மாணவர்களுக்கானது) (தனிப்பாடல், குழுப்பாடல்)

- தனிப்பாடல் போட்டியில் அனைத்துப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் தத்தமது பிரிவில் பங்கெடுக்கலாம்.
- தூய யோசவ் வாஸ் அடிகளின் வாழ்வையும் பணியையும் பற்றியதாக, புதிதாக எழுதி இசையமைக்கப்பட்டதாக, 3 – 5 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.
- ஒரு பிரிவைச் சார்ந்தவர்கள் தனிப்பாடலிலும் குழுப்பாடலிலும் பங்கெடுக்கலாம்.
- குழுப்பாடலில் 5 – 12 வரையான மாணவர்கள் பங்கெடுக்கலாம்.



- போட்டி நடைபெறும் இடம் : கலையருவி, நாள்: ஒக்ரோபர் 07ஆம் திகதி (சனி), நேரம் : காலை 9.00 மணி.
- இத்திகதிக்கு முன்னர் பங்கு மட்டத்தில் பங்குத்தந்தையின் மேற்பார்வையில் தனிப்பாடல் போட்டியை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களை இப்போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.
- குழுப்பாடல் போட்டிக்கு எல்லாப் பிரிவினரையும் ஒன்றிணைத்து ஒரு பங்கில் இருந்து ஒரு குழு மட்டுமே பங்கெடுக்கலாம்.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : செப்ரம்பர் 29ஆம் திகதி (வெள்ளி).
- மறைமாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்

### நடனப் போட்டி (மாணவர்களுக்கானது) (தனி நடனம், குழு நடனம்)

- தனிநடனம் பரதநாட்டியமாக இருக்க வேண்டும். அனைத்துப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் தத்தமது பிரிவில் பங்கெடுக்கலாம்.
- தூய யோசவ் வாஸ் அடிகளின் வாழ்வையும் பணியையும் கருப்பொருளாகக் கொண்டு இதற்கான பாடல் இருக்க வேண்டும். புதிதாக எழுதி இசையமைக்கப்பட்டதாக, 4 – 6 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.
- ஒரு பிரிவைச் சார்ந்தவர் ஒரு நடனத்தில் அதாவது தனி நடனத்தில் அல்லது குழு நடனத்தில் மட்டுமே பங்கெடுக்கலாம்.
- குழு நடனம் கிராமிய நடனமாக இருக்க வேண்டும். இதில் 5 – 12ற்கு உட்பட்ட மாணவர்கள் பங்கெடுக்க வேண்டும்.
- போட்டி நடைபெறும் இடம் : கலையருவி, நாள்: ஒக்ரோபர் 14ஆம் திகதி (சனி), நேரம் : காலை 9.00 மணி.
- இத்திகதிக்கு முன்னர் பங்கு மட்டத்தில் பங்குத்தந்தையின் மேற்பார்வையில் தனிநடனப் போட்டியை நடாத்தி, ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களை இப்போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.
- குழுநடனப் போட்டியில் எல்லாப் பிரிவினரையும் ஒன்றிணைத்து ஒரு பங்கில் இருந்து ஒரு குழு மட்டுமே பங்கெடுக்கலாம்.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : ஒக்ரோபர் 6ஆம் திகதி (வெள்ளி).
- மறைமாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- பரிசு : குழுவிற்கான பெயர் பொறித்த விருதும், ஒவ்வொருவருக்கும் மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும் வழங்கப்படும்

### நாடகப் போட்டி (மாணவர்களுக்கானது)

- மறைக்கல்வி மாணவர்கள் பங்கெடுக்கலாம். ஒரு பங்கில் இருந்து ஒரு நாடகம் மட்டுமே போட்டியில் பங்கெடுக்கலாம்.
- தூய யோசவ் வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும் இன்றைய கிறிஸ்தவ சமூகத்திற்குத் தரும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, நவீன நாடக யுக்திகளைக் கொண்டதாக இந்நாடகம் அமைய வேண்டும்.
- நேரம் : 30 நிமிடங்கள்
- போட்டி நடைபெறும் இடம் : கலையருவி, நாள்: ஒக்ரோபர் 21ஆம் திகதி (சனி), நேரம் : காலை 9.00 மணி.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : ஒக்ரோபர் 13ஆம் திகதி (வெள்ளி).
- பரிசு : குழுவிற்கான பெயர் பொறித்த விருதும், ஒவ்வொருவருக்கும் மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும் வழங்கப்படும்.

### இறுவட்டுப் போட்டி (திறந்த போட்டி)

- தூய யோசவ் வாஸ் அடிகளின் வாழ்வையும் பணியையும் பற்றியதாக, அவருடைய புதுமைகளை உள்ளடக்கியதாக பாடலை எழுதி, இசையமைத்து, இறுவட்டாக எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்.
- ஒருவர் எத்தனை பாடல்களையும் தனித்தனி இறுவட்டில் ஒப்படைக்கலாம்.
- இப்பாடல்கள் பல்லவியுடன் இரண்டு அல்லது மூன்று சரணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
- ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : ஒக்ரோபர் 6ஆம் திகதி (வெள்ளி).
- முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்

### குறுந்திரைப்படப் போட்டி (திறந்த போட்டி)

- 'யோசவ் வாஸ் அடிகளின் வழியில் இன்றைய குடும்பங்கள்' என்ற மையப்பொருளைக் கொண்டதாக இன்றைய குடும்பங்களில் ஏற்படக்கூடிய சவால்கள் சிக்கல்களையும், அவற்றைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக இக்குறுந்திரைப்படம் அமைய வேண்டும்.
- 7 – 12 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.
- ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
- விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் : ஒக்ரோபர் 6ஆம் திகதி (வெள்ளி).
- முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
- பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்

### முக்கிய குறிப்புகள்

- மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்கெடுக்கலாம்.

**எமது தபால் முகவரி :**

- கவிதை, கட்டுரை, சித்திரப் போட்டியாளர்கள் தங்கள், பெயர், விலாசம், பங்கு, தொலைபேசி இலக்கம் போன்றவற்றை பிறிதொரு தாளில் தெளிவாகக் குறிப்பிட்டு ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி : தூய யோசவ்வாஸ் ஆண்டுப் போட்டிகள், கலையருவி, 116/2. சென். யோசப் வீதி, பெற்றா, மன்னார்.
- தமுவல் மற்றும் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுவம் வழிகள்**

- இப்போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களின் ஒவ்வொரு பிரதி பங்குத் தந்தைக்கு அனுப்பிவைக்கப்படும். அவரிடமிருந்து பிரதிகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- இந்த விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் 5.00 ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**பரிசில்கள் பற்றிய விபரங்கள் :**

- பணப்பரிசில்களைவிட விருதும் சான்றிதழும் வழங்கி, மன்னாவில் புகைப்படத்துடன் வெற்றியாளர்களின் விபரங்கள் பிரசுரிக்கப்படுவதே சிறந்தது என எமது தொடர்பாடல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
- இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்கள் உங்கள் பாஸ்போர்ட் அளவுப் புகைப்படங்களை எமக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**இப்போட்டிகளின் நோக்கம் :**

இப்போட்டிகளின் நோக்கம் மாணவர்கள் மத்தியிலும் ஏனையவர்கள் மத்தியிலும் தூய யோசவ் வாஸ் அடிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது. அடுத்து, மாணவர்கள் மற்றும் ஏனையவர்கள் மத்தியில் காணப்படும் ஆற்றல் திறமைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.

**ஊக்கப்படுத்துங்கள் :**

இப்போட்டிகளில் உங்கள் பங்கு மாணவர்களும் மற்றவர்களும் ஆர்வத்தோடு பங்கெடுக்க பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள் ஊக்கமும் உற்சாகமும் வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- பங்குத்தந்தையர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை எடுத்து திருப்பலி அறிவித்தலிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் விளக்கங்களை வழங்கி மாணவர்களை ஊக்குவிக்குமாறு விநயமாக வேண்டிக் கொள்கிறோம்.
- இப்போட்டிகளை சுமுகமாக, சிறப்பாக நடத்தி முடிக்க உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**

தொடர்புகளுக்கு : தொலைபேசி இல. 023-2250789

## மன்னார் மறைமாவட்டத்தின்
## வாழ்வுதயம் (கறிற்றாஸ்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற
# 'கலை வழி அமைதி' நிகழ்வு











# ஆவணம் கார்மேல் மாதா ஆலயத் திறப்பு விழா






# அடம்பன் வியாகுல மாதா ஆலயத் திறப்பு விழா


## புனித யோசவ்வாஸ் பற்றிய கருத்தரங்கு
## மன்னார் குருக்களும் பங்கேற்பு




புனித யோசவ்வாஸ் பற்றிய மூன்று நாள் கருத்தரங்கு கடந்த யூன் மாதம் 3, 4, 5 ஆகிய தினங்களில் கண்டி லேவல்லயில் அமைந்துள்ள பற்றிமா அன்னை தியான இல்லத்தில் இடம்பெற்றது.

புனித யோசவ்வாஸ் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தமர்வில் கொழும்பு, கண்டி, திருகோணமலை, சிலாபம், மன்னார் ஆகிய ஐந்து மறைமாவட்டங்களில் இருந்து குருக்கள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு மறைமாவட்டத்தில் இருந்தும் ஐந்து பேர் வீதம் 25 பேர் இதில் கலந்துகொண்டனர். மன்னாரில் இருந்து அருட்திரு. அருட்பிரகாசம், அருட்திரு. தமிழ் நேசன், அருட்திரு. நேரு, அருட்திரு. அருட்குமரன், அருட்திரு. கொட்வின் (சனா) ஆகியோர் கலந்துகொண்டனர். செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்திரு. ஜெயபாலன் குரூஸ் அவர்கள் வளவாளராக இக்கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

இதைப்போன்று கடந்த யூன் மாதம் 8, 9, 10 ஆகிய தினங்களில் ஏனைய 5 மறைமாவட்டக் குருக்களுக்கும் இந்தக் கருத்தமர்வு இடம்பெற்றது.

## 'மன்னார் மறைமாவட்டத்தில் தூய யோசவ் வாஸ்'
# நூல் வெளியீட்டு விழா






மன்னார் மறைமாவட்டக் குருவான அருட்திரு. ம. க. அருட்பிரகாசம் எழுதிய 'மன்னார் மறைமாவட்டத்தில் தூய யோசவ்வாஸ்' என்ற மகுடம் தாங்கிய நூல் வெளியீட்டு விழா கடந்த யூலை மாதம் 22ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலினி வெனிற்றன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் மற்றும் மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா, மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்திரு. அ. ஞானப்பிரகாசம் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவிற்கான வரவேற்புரையை மன்னார் மாவட்டச் செயலகத்தின் (கச்சேரியின்) பிரதம கணக்காளர் திரு. ஜெபனேசன் அவர்கள் வழங்கினார். நூல் ஆய்வுரையை மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பயஸ் றதி பீரிஸ் அவர்கள் வழங்கினார். நன்றியுரையையும் ஏற்புரையையும் நூலாசிரியர் அருட்தந்தை ம. க. அருள்பிரகாசம் அடிகளார் வழங்கினார். இந்நிகழ்வில் பல குருக்கள், துறவியர், பொதுநிலையினர் கலந்துகொண்டனர்.

# திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவும் மணி விழாவும்








மன்னார் கல்வி வலயத்தின் தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி 03.09.2017 அன்று ஓய்வு பெறவுள்ள திருமதி பெப்பி மதுரநாயகி விக்ரர் லெம்பேட் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் கடந்த யூலை மாதம் 23ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மன்னார் தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள ஆகாஷ் விடுதி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வை மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த தமிழ் பாட ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலையருவி இயக்குனரும், மன்னா ஆசிரியருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். ஜெயபாலன் அடிகளாரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார். விழா நாயகி திருமதி பெப்பி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பதக்கம் அணிவித்து, நினைவுப் படிகமும் வழங்கப்பட்டது. ஐம்பதுக்கும் அதிகமான ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். மதிய விருந்தும் வழங்கப்பட்டது.


## ‘மன்னார் மறைமாவட்டத்தில் தூய யோசவ் வாஸ்’

# அருட்திரு. ம. க. அருள்பிரகாசம் எழுதிய நூல் பற்றிய ஓர் பார்வை

- அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் -

இலங்கை நாட்டின் முதல் புனிதராக விளங்கும் யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் அற்புதமானது; அதிசயமானது; ஆச்சரியம் நிறைந்தது. இன்றைய திருச்சபைக்கு முன்னுதாரணமாகவும் மேல்வரிச்சட்டமாகவும் விளங்குவது.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை 2017ஆம் ஆண்டை ‘புனித யோசவ்வாஸ் ஆண்டு’ எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டில் தூய யோசவ்வாஸ் அடிகளாரைப்பற்றி அதிகமதிகமாக அறிய, சிந்திக்க, கலந்துரையாட திருநிலையினருக்கும் பொது நிலையினருக்கும் அதிக வாய்ப்புகள் கிடைத்துள்ளன.




### தூய யோசவ்வாஸ் அடிகளாரின் சிறப்பு

ஆசியாவின் மிக உன்னதமான மறைபரப்பாளராக புனித யோசவ்வாஸ் அடிகளார் கருதப்படுகின்றார். ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க சமயம் அடக்கி ஒடுக்கப்பட்டது; பலவிதமான துன்புறுத்தல்களை எதிர்கொண்டது. கத்தோலிக்க குருக்களுக்கு அடைக்கலம் கொடுப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது.

உயிர் அச்சுறுத்தல் நிறைந்த ஓர் இக்கட்டான சூழ்நிலையில் யோசவ் வாஸ் அடிகளார் இந்தியாவில் இருந்து வந்து இந்நாட்டிற்குள் காலடி பதித்தார். ஓர் யாசகன் (பிச்சைக்காரன்) வேடம் பூண்டு இரகசியமாக இந்நாட்டிற்குள் வந்தார். இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து, இறை மனிதனாக 10 வருடங்கள் தனி ஒரு குருவாகவும் 14 வருடங்கள் சில குருக்களின் உதவியோடும் இந்நாட்டின் நாலா திசைகளிலும் நாம் வியக்கத்தக்க அரும்பெரும் பணியாற்றினார்.

இலங்கையில் தூர்ந்து அழிந்துபோகும் நிலையில் இருந்த கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கட்டியெழுப்பினார். அணைந்துபோகும் தறுவாயில் இருந்த கத்தோலிக்க விசுவாச விளக்கைத் தூண்டிவிட்டுப் பிரகாசிக்கச் செய்தார். இலங்கையில் கத்தோலிக்கத்துக்கு புது இரத்தம் பாய்ச்சி, புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

அதனால்தான் அவர் ‘இலங்கையின் அப்போஸ்தலர்’’ என்று அனைவராலும் அழைக்கப்படுகின்றார். “இலங்கைத் திருச்சபையைக் காத்த மாவீரன்’’ என்றும், “இலங்கைத் திருச்சபையின் காரண கர்த்தா” எனவும் அவர் திருச்சபை வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகின்றார். ‘யோசவ்வாஸ் முனீந்திரர்’ எனவும் ‘சம்மனசுச் சுவாமி’ எனவும் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார். இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் வாழ்ந்து பணியாற்றிய அடிகளாரின் வாழ்வும் பணியும் இன்றைய திருச்சபைக்கு பல செய்திகளைத் தருவதாக உள்ளது.

### இந்நூலின் அமைப்பும் உள்ளடக்கமும்

இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. பகுதி I இல் தூய யோசவ்வாஸ் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தில் தரிசித்த இடங்கள், கிராமங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இவ்விடங்களில் அவர் நாட்டிய சிலுவைகள் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. அத்துடன் அந்த இடங்கள் தற்போது எப்படியாகப் பராமரிக்கப்படுகின்றன போன்ற செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில் இடம்பெறும் கட்டுரைகள் மன்னார் மறைமாவட்ட மாதாந்தக் கத்தோலிக்க பத்திரிகையான ‘மன்னா’வில் தொடர் கட்டுரையாக இந்த யோசவ்வாஸ் ஆண்டில் (2017இல்) வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் பகுதி II இல் இந்நூலாசிரியர் தூய யோசவ்வாஸ் அடிகள்பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. “பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த யோசவ்வாஸ் அடிகள் பற்றிய எனது கட்டுரைகள்’’ என்ற மகுடத்தின்கீழ் எட்டுக் கட்டுரைகள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

வாஸ் அடிகளாரின் தன்னிகரற்ற வாழ்வையும் பணியையும்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. சில ஆங்கில நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு தூய யோசவ்வாஸ் ஆண்டாக இருப்பதனால் இந்த ஆண்டிலும் சில புதிய நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் யோசவ்வாஸ் அடிகளாரின் மன்னார்ப் பணிகளை மையப்படுத்தியதாக இந்நூல் வெளிவருவது இதன் சிறப்பம்சமாகும்.

### நூலாசிரியர் அருட்பிரகாசம் அடிகளார்

மன்னார் மறைமாவட்டக் குருவான அருட்திரு. அருட்பிரகாசம் அடிகளார் மாந்தைப் பங்கில் உள்ள பெரிய நாவற்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர். 1997ஆம் ஆண்டு இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பங்குத்தந்தையாகவும், பாடசாலை ஆசிரியராகவும் தனது பணிகளை ஆற்றிவருகின்றார். இவர் வயதில் எனக்கு மூத்தவராக இருந்தாலும் தனது பல்கலைக்கழகக் கல்வியை நிறைவுசெய்தபின் தொடர்ந்து குருத்துவக் கல்வியை மேற்கொண்டதால் என்னோடு ஒன்றாகக் குருப்பட்டம் பெற்றார்.

இவர் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும், இறையியல் இளமாணிப் (B.Th) பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் (B.A) பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (M.A) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

வரலாறு மற்றும் சமூகவியல் துறையில் ஆர்வமும் தேடலும் உள்ளவராகக் காணப்படுகின்றார். இவர் மன்னார் மறைமாவட்டம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இதைவிட தனது இறையியல் கல்வியின் நிறைவில் மன்னார் மறைசாட்சிகள் பற்றியும், தனது இளமாணிக் கல்வி நிறைவில் நாவாந்துறைக் கிராமம் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தன்னுடைய முதுமாணிப் பட்டத்தையொட்டி பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இதில் மன்னார் மாவட்ட சுதேச மக்கள் தொடர்பாக இவர் எழுதிய கட்டுரை முக்கியமானது.

இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் சில வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தினாலும் தனது ஆய்வு முடிவுகளில் இவர் உறுதியோடு நிற்பவர்.

அருட்பிரகாசம் அடிகளாரின் ஆய்வு முயற்சிகள் தொடர வேண்டும். இதுபோன்ற இன்னும் பல வரலாற்று நூல்களை அவர் தரவேண்டும் என்று வாழ்த்தி அவருடைய முயற்சிகளைப் பாராட்டி நிற்கின்றேன்.

---

அருள் மழையில் நனைந்த ஆடி 26

# வங்காலை புனித ஆனாள் திருவிழா









வங்காலைப் பதியில் சிங்காசனம் கொண்டு எழுந்தருளி அருள்மழை பொழிந்து வரும் தூய அன்னம்மாள் அன்னையின் 2017ஆம் ஆண்டுத் திருவிழா கடந்த யூலை மாதம் 26ஆம் நாள் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருவிழாவை முன்னிட்டு கொடியேற்ற நாள் அன்று யூலை 17ஆம் நாள் மாலை 5.00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட அன்பிய இயக்குனரும், திருக்கோயில் பங்குத்தந்தையுமான அருட்திரு. சுகந்தன் அடிகள் மாலை அணிவிக்கப்பட்டு பேண்ட் வாத்தியம் முழங்க ஊர்வலமாக கொடியேற்ற நிகழ்வில் கலந்துகொள்ள அழைத்துவரப்பட்டார்.

ஒன்பது நவநாள் மாலை ஆராதனைகளில் பல குருக்கள் கலந்துகொண்டு மறையுரை ஆற்றி திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அருட்தந்தையர்களான சுகந்தன், அருட்குமரன், பிராங் டப் அந்தோனிசாமி, ஜெகன் கூஞ்ஞ (அமதி), சுவின் றெவல் (அமதி) ஆகியோர் ஒவ்வொரு நாளும் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றினர். **(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)**

---

# தலைமன்னார் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம்







கடந்த யூலை மாதம் 16ஆம் திகதி தலைமன்னார் பங்கில் 39 பிள்ளைகளுக்கு முதல் நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது. இவர்கள் தலைமன்னார் மேற்கு, தலைமன்னார் துறை, தலைமன்னார் ஸ்ரேசன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். தலைமன்னார் பங்கின் தாய் ஆலயமான புனித லோறன்சியார் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் குடும்பப்பணி பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

---

# யாழ்ப்பாணத்தில் லியோன் புனித வளனார் சபை

யாழ். மறை மாவட்டத்தில் பணிபுரிவதற்காக லியோன் புனித வளனார் சபை (Sisters of St. Joseph of Leon) அருட்சகோதரிகள் புதிதாக வருகை தந்துள்ளார்கள்.

யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அழைப்பின் பேரில் இவர்கள் கடந்த 20.07.2017 அன்று மணற்காட்டுப் பங்கில் தமது பணியை ஆரம்பித்துள்ளார்கள். அன்றைய தினம் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P. J. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் அவர்கள் வரவேற்கப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. **(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)**

---

# கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு - 2017

கத்தோலிக்க மறைப் பாடசாலைகளில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் **கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு**க்கான விண்ணப்பப்படிவங்கள், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நாட்டின் அனைத்துப் பங்குகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மறைப்பாடசாலையின் முதல்வரான பங்குத்தந்தையினால் மட்டுமே இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட ரீதியில் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதை அறியத்தருகிறோம்.

விண்ணப்பப்படிவங்கள் இதுவரை கிடைக்கப்பெறாத அல்லது விண்ணப்பப்படிவங்கள் போதுமானதாக இல்லாத மறைப்பாடசாலை முதல்வர்கள், கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரங்களில் வந்து அல்லது தமது பங்கிற்குத் தேவையான விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால் மூலமாக அல்லது கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**முகவரி** :- பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு.

**தொலைபேசி எண்.** 011-2785230 / 011-2177075

நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பங்கு ரீதியாக 24.08.2017க்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**- அருட்பணி பியல் ஜானக்க, தேசிய மறைக்கல்வி இயக்குனர்.**



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 66

# குரைத்துக்கொண்டிருப்பது மட்டுமல்ல குறிக்கோள்!

***அரசியல் 'வாதி'கள் என்றாலே இப்படித்தானா?***

சிகையலங்காரம் செய்யும் கடைக்கு பூ வியாபாரி ஒருவன் வந்து முடிதிருத்தம் செய்துகொண்டான். அதற்கான பணத்தினைக் கொடுத்தபோது, "இவ்வாரத்தில் நான் சமூகத்தொண்டு செய்கிறேன். அதனால் இவ்வாரத்தில் நான் கூலி வாங்குவதில்லை" என்கிறான் அத்தொழிலாளி. மகிழ்வோடு சென்ற பூ வியாபாரி மறுநாள் முடிதிருத்தம் செய்பவன் கடையின் வாசலின் முன்பதாக 'மிக்க நன்றி' என எழுதப்பட்ட அட்டையோடு, பூக்கொத்து ஒன்றினையும் வைத்துவிடுகிறான். மறுநாள் கடையைத் திறந்தபோது 'மிக்க நன்றி' என்ற வாசக அட்டையினையும் பூக்கொத்தினையும் பார்த்து முடிதிருத்தும் நண்பன் மகிழ்கிறான்.

இவ்வாறிருக்கையில் அன்றைய நாளில் மரக்கறிக் கடைக்காரன் ஒருவன் வந்து முடிதிருத்தம் செய்து கொண்டான். அவனும் பணம் கொடுத்தபோது பூ வியாபாரிக்குச் சொன்ன செய்தியையே மரக்கறிக் கடைக்காரனுக்கும் கூறுகிறான். மரக்கறிக் கடைக்காரன் மகிழ்ச்சியோடு வீடு செல்கிறான். அடுத்தநாள் முடிதிருத்தம் செய்யும் தொழிலாளி கடையைத் திறந்தபோது, 'நன்றி, வளமுடன் வாழ்க' என எழுதப்பட்ட அட்டையோடு, காய்கறிகள் நிறைந்த ஒரு பொதியைக் காண்கிறான். மகிழ்ச்சி அடைந்தவனாக தன் வேலையைத் தொடர்கிறான்.

அந்நாள் மாலைவேளை ஓர் அரசியல்வாதி வந்து முடிதிருத்தம் செய்துகொள்கிறான். பணம் கொடுத்தபோது, எவ்வாறு பூ வியாபாரியோடும் மரக்கறிக் கடைக்காரனோடும் நடந்துகொண்டானோ அவ்வாறே அரசியல்வாதியுடனும் நடந்துகொள்கிறான் முடிதிருத்தம் செய்பவன். மட்டற்ற மகிழ்வோடு செல்கிறார் அரசியல்வாதி. மறுநாள் முடிதிருத்தும் தொழிலாளி கடையைத் திறக்க வந்தபோது, ஒரு நாளும் இல்லாத வகையில் சுமார் 25 பேர் அளவில் முடிதிருத்தம் செய்வதற்காக வரிசையில் நின்றதைப் பார்த்து அவன் அதிர்ந்து போகிறான்! அரசியல்வாதிகள் எப்படி எப்படியெல்லாம் யோசிப்பார்கள் என நம்மால் ஊகிக்கக்கூட முடியாத அளவிற்கு அவர்களின் திட்டம் அமைந்திருக்கும். இவ்வாறான குணங்கள் எல்லாரிடமும் இல்லாவிடினும் அனேகரில் இருப்பது இவர்களின் பிறவிக்குணமா? அல்லது அரசியலில் வந்ததும் இப்பேர்ப்பட்ட குணங்கள் இவர்களிடத்தில் தொற்றிக்கொள்கிறதா ஒட்டிக்கொள்கிறதா என எண்ணவேண்டி இருக்கிறது.

***பக்கச்சார்பு வேண்டாம்***

வடமாகாண முதல்வருக்கு எதிராகவும் ஆதரவாகவும் உருவாகிய நிலமை ஒருவாறு முடிவுக்கு வந்து இயல்பு நிலை தோன்றத் தொடங்கியிருப்பதுபோல் தோன்றுகிறது! இந்நிலையில் பத்திரிகை நிறுவனங்களும் - ஆசிரியர்களும் ஒரு பக்கச் சார்பாக நடந்துகொள்வது பத்திரிகைச் செய்திகளில் இருந்தும் பிரசுரமாகும் கட்டுரைகளில் இருந்தும் வெளிப்படையாகவே தெரிகிறது. இது, பத்திரிகைகள் நடுவுநிலமையில் இருந்து தவறுவது மட்டுமல்லாது தமிழர்கள் ஒன்றாக நின்று உரிமைகோரும் பலத்தையும் நாளடைவில் சிதைத்துவிடும் ஒரு செயற்பாடாகவே நோக்கவேண்டி இருக்கிறது. 'அரசியலில் எல்லாம் சகஜந்தான்' என்பது மக்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவர்களின் அடிப்படை நம்பிக்கையையே நிர்மூலமாக்கும் ஒன்றாக மாறிவிடக்கூடிய ஆபத்து இதில் இருக்கிறது என்பதனை பத்திரிகை ஆசிரியர்கள் தயவுசெய்து எண்ணிப்பார்த்து தங்கள் பத்திரிகைகளை எழுதவேண்டிய பாரிய சமூகப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

***மாகாண சபையையே ஆளத்தெரியாதவர்களா?***

பிரிந்து நின்றுகொண்டு செயற்படுவதும் அரசியல் செய்வதும் தமிழர்களை - தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமானது அல்ல. பிளவுபட்டு நிற்கும் எம் பலவீனத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டிருந்தால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் எம்மைப் பிரித்தாழ்வதிலேயே காலத்தைக் கடத்திவிடுவார்கள். அதனைத்தான் அவர்கள் மிக நீண்ட காலமாக மிக நேர்த்தியாகச் செய்து வெற்றியும் கண்டுவருகிறார்கள். இப்போதுதான் கொஞ்சக் காலமாக நிலமைகள் மாறி ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கும் நிலமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகத் தோன்றியிருக்கிறது. அதனை இழந்துவிடாமல் பாதுகாத்து தொடர்ந்து பயணித்து உரிமைகளை அடைவது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இன்றைய காலகட்டத்தில் இருக்கிறது.

"இன்றைய நிலையில் முதன் முதலாக ஜனநாயக ரீதியில் உருவாக்கப்பட்ட மாகாண சபையையே உருப்படியாகக் கொண்டு நடத்த முடியாத இவர்கள்தான் நமக்குச் சமஸ்டியைப் பெற்றுத்தரப் போகிறார்கள்! இதனை இவர்களிடம் இருந்து கனவிலும் எதிர்பார்க்க முடியாது!" என தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்காக 1960களில் சத்தியாக்கிரக உண்ணாவிரதம் ஏனைய அகிம்சைவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு உழைத்த ஒரு பெரியவர் இன்றைய தமிழ் அரசியல் நிலைமை குறித்துக் குறிப்பிட்டதை தமிழ் அரசியல் தலைவர்கள் - பிரதிநிதிகள் மனத்தில் இருத்துவது நன்மை பயக்கும். மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் தமிழ் மக்களும் தமிழ்பேசும் மக்களும் இந்நாட்டின் சுதந்திரக் குடிமக்களாய் வாழக்கூடிய சூழலை உருவாக்க இவர்கள் ஓரணியில் நின்று பாடுபடவேண்டும்.




***கூடியிருக்குமா/குலைந்துபோகுமா கூட்டமைப்பு?***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடியிருக்குமா? அல்லது குலைந்து போகுமா? என்றெல்லாம் இப்போது நிறையவே பலரும் பல மட்டங்களில் பேசிவருகிறார்கள். தெற்கில் கூடாது (கூடிவரமாட்டார்கள்) எனச் சொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திர மக்கள் முன்னணியும் கடந்த 2015இல் நாட்டுத் தலைவருக்கான தேர்தலில் கூடிவந்து கூட்டாட்சியை அமைத்துக்கொண்டது. ஆனால் 'திரண்டால்தான் மிடுக்கு' என உணர்ந்துகொண்டு ஏற்கெனவே கூடியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் கூடியிருக்குமா அல்லது குலைந்துபோகுமா என்ற ஏக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை எண்ணுகிறபோது நெஞ்சு கனக்கிறது.

எமது நோக்கில், கூடியிருந்தால் (அடுத்தடுத்த தேர்தலில்) கொஞ்சமாவது மிஞ்சும்! குலைந்து போனால் கூடும் இல்லாமல் குடியிருந்த இடமும் தெரியாமற்போகும் பேராபத்து இருக்கிறது என்பதை மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நினைவில் நிறுத்திக் கொண்டால் சரி. இயேசு சொன்னதைப்போல அன்னிய செல்வத்தைக்கொண்டு (நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களாக) இப்போதே நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். பிறகு, பிச்சை எடுக்க வெட்கமாகவும், மண்வெட்டி பிடித்து வெட்டக் கஸ்ரமாகவும் இருக்கும் என்பதையும் நினைவுறுத்த விரும்புகிறோம்!

***முதலமைச்சரை இனவாதியாகக் காட்டுவது ஏற்புடையதல்ல!***

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம். ஏ. சுமத்திரன் அவர்கள் வடமாகாண சபை தொடர்பாகவும் மத்திய அரசின் செயற்பாடுகள் குறித்தும் அண்மையில் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியினை உதயன் நாளிதழ் 2017 ஆடி மாதம் 02ஆம், 03ஆம் திகதிகளில் பிரசுரித்திருந்தது. அச்செவ்வியில் கௌரவ எம். ஏ. சுமத்திரன் அவர்களிடம் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதில் அளித்திருந்தார். அவற்றில் மூன்று கேள்விகளையும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களையும் முதலில் நோக்கலாம்.

"இந்தச் செயற்பாட்டின் ஊடாக (2015 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டணிக்கு ஆதரவாக இருக்காமை, தமிழ் மக்கள் பேரவை உருவாக்கம்) அவர் (விக்கினேஸ்வரன்) தமிழர்களின் உணர்வைத் தூண்டி, இனவாதத்தைத் தூண்டி அவரது தனிப்பயணத் திட்டத்தைப் பூரணப்படுத்தியுள்ளார் அல்லவா?" என்ற கேள்விக்கு; "எல்லா இனங்களிலும் இனவாத, அடிப்படைவாத, கடும் போக்குவாதக் குழுக்கள் உள்ளன. 2015 தேர்தலில் அந்தக் குழுதான் போட்டியிட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத்தான் ஆதரவு வழங்கினார். மக்கள் நிராகரித்து விட்டனர். இடம்பெறும் முழுக் கடையடைப்புக்கள், ஆர்ப்பாட்டங்களை வைத்து தமிழர்கள் எப்பக்கம் உள்ளார்கள் என்று தீர்மானிக்க முடியாது. பல்வேறு காரணங்களால் அவை இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளையே இனவாதிகள் அதிகம் விரும்புகின்றனர்" என விடை பகர்ந்திருக்கிறார்.

அடுத்து, "வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் உறவுப் பாலமொன்றை அமைப்பதற்கு நீங்களும் சம்பந்தனும் எடுத்த நடவடிக்கைகளுக்கு விக்கி தடையாக இருந்தார் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?" எனக் கேட்கப்பட்டபோது, "ஆம். ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

மேலும், "வடக்கில் இனவாதம் பேசும் சிவாஜிலிங்கம் மற்றும் விக்கினேஸ்வரன் போன்றவர்கள் கைது செய்யப்படவில்லை என்று தெற்கில் குற்றஞ்சாட்டப்படுகிறதே?" எனக் கேட்டபோது, "அவர்கள் (சிவாஜிலிங்கம், விக்கினேஸ்வரன்) இனவாதம் பேசுகிறார்கள்; கடும் போக்குவாத சிந்தனையைக் கொண்டுள்ளார்கள் என்ற கருத்துடன் நான் ஒத்துப்போகின்றேன். ஆனால், அவர்கள் அந்த இனவாதத்தின் ஊடாக மக்களைத் தூண்டி வன்முறைக்குத் தள்ளவில்லை. 'தெற்கில் இனவாதம் பேசித்திரியும் ஞானசார தேரரின் செயற்பாட்டுக்குச் சமமான செயற்பாடாக விக்கி, சிவாஜிலிங்கம் போன்றவர்களின் செயற்பாட்டைப் பார்க்க முடியாது' என்று கூறிய அமைச்சர் ராஜிதவின் கருத்தோடு நான் உடன்படுகிறேன்" எனவும் தெரிவித்திருக்கிறார் எம். ஏ. சுமத்திரன்.

***அரசியல் பெரிதாகத் தெரியாது, தெரிந்ததைக்கொண்டு சொல்கிறோம்!***

முதலில், முதலமைச்சரை ஓர் அடிப்படைவாத, கடும்போக்கு இனவாத குழுவோடு ஒப்பிட்டு அவரை இனவாதியாக சித்தரித்திருப்பது மிகத்தவறான விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அல்லது கூட்டமைப்பின் (பிரதான) கட்சியான தமிழரசுக் கட்சியுடன் சில விடயங்களில் ஒத்துப்போகவில்லை என்பதற்காக முதலமைச்சரை இனவாதியாகக் காட்டுவது மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகவே தெரிகின்றது.

அடுத்து, தமிழர்களின் அரசியல் தீர்வு யோசனை குறித்தோ அல்லது புதிய அரசியல் அமைப்பு உருவாக்கல் குறித்தோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழரசுக் கட்சியோ மென்போக்கைக் கடைப்பிடிக்க முனையலாம். ஆனால், தமிழர்கள் அடையவேண்டிய அரசியல் அபிலாசைகளை யாராவது ஒருவரோ அல்லது சிலரோ மிகவும் காத்திரமான முறையில் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டிய தேவை இருக்கிறது. அப்படிச் சொல்லாவிட்டால் தமிழர்களுக்கு உரியதான உரிமைகள் மறக்கப்பட்டுவிடும் ஆபத்து இருக்கிறது.

ஆகவே, இவ்வாறு தமிழர்களின் அபிலாசைகளான தமிழர்கள் ஒரு தேசிய இன அடையாளத்திற்கு உரியவர்கள், சுயநிர்ணய உரிமைக்கு உரியவர்கள், பூர்வீகமாக வடகிழக்குத் தாயகத்தில் வாழ்ந்துவரும் ஒரு மக்கள் குழுமத்தினர் போன்ற அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களையும்; தற்போது பூதாகரமாக எழுந்து நிற்கும் பிரச்சினைகளான வலிந்து காணாமலாக்கப்பட்டோர், பொதுமக்களின் காணிகளை இராணுவத்தினர் வைத்திருப்பது, அதிகப்படியான இராணுவப் பிரசன்னம், வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை போன்றவற்றை தேவைக்கு ஏற்ப தெற்கு அரசியல்வாதிகளுக்கும் சர்வதேசத்திற்கும் சொல்லிக் கொண்டிருக்கிற வடமாகாண முதல்வரை (மற்றும் சிலர் இவ்விடயங்கள்பற்றிக் கூறுவதை இங்கு விட்டுவிடுவோம்!) அடிப்படைவாத இனவாதியாகக் கருத முடியாது. மேலும் அவ்வாறு கருதுவது சரியானதும் அல்ல.

ஏனெனில், தான் பிரதிநிதித்துவம் செய்கிற ஒரு மக்கள் குழுமத்தின் அடிப்படை அபிலாசைகளை – தங்கள் உரிமைகளுக்காகப் பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்த ஒரு மக்கள் குழுமத்தின் நியாயங்களை அவர் கூறிக்கொண்டிருப்பது எவ்வகையிலும் தவறானது அல்ல. ஆக, வடமாகாண முதல்வரை ஓர் அடிப்படைவாத இனவாதியாகக் காட்ட முனைவது நம் அரசியல்வாதிகளின் குறுகிய, பச்சைச் சுயநல அரசியல் நோக்கங்களுக்காகவே ஆகும்.

இவ்வாறு, முதலமைச்சரை இனவாதியாக காட்ட முனைவது தெற்கிற்கு வடக்கிலிருந்து எண்ணை அனுப்பி எரியும் நெருப்பில் எண்ணை வார்ப்பதுபோல் ஆகிவிடும். 'தெற்கைப் பார்க்கிலும் வடகிழக்கில் இருக்கும் அடிப்படைவாத இனவாதிகளால்தான் இன்னும் அரசியல் தீர்வைக்காண முடியாமல் இருக்கிறது' என்ற ஒரு மாயையை தெற்கில் உருவாக்கி சர்வதேசத்திற்கும் பரப்பிவிடுவார்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள்!

எனவே, பேட்டியளிப்பவர்கள் பெரிய அரசியல்வாதிகளாக, சட்ட நுணுக்கங்களை எல்லாம் தெரிந்தவர்களாகவும் இருக்கலாம். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறாக ஒரு மக்கள் குழுமத்தை பிரதிநிதித்துவம் செய்கிற முதல்வரை உண்மைக்குப் புறம்பான முறையில் சித்தரிக்கக்கூடாது என்பது மக்களின் பெயரால் முன்வைக்கப்படும் விண்ணப்பமாக இருக்கிறது.

***தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேறுங்கள்***

சரி, 'எல்லா இனங்களிலும் இனவாத, அடிப்படைவாத, கடும்போக்குவாதக் குழுக்கள் உள்ளன. 2015 தேர்தலில் அந்தக் குழுதான் போட்டியிட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத்தான் ஆதரவு வழங்கினார். மக்கள் நிராகரித்து விட்டனர்' என கௌரவ எம். ஏ. சுமத்திரன் கூறுகிறார். ஆனால், 2010இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரித்தது – யாரை ஆதரிக்கத் தமிழ் மக்களை தூண்டியது என்பதனையும் ஞாபகப்படுத்திப் பார்ப்பது நல்லது! பல ஆண்டுகள் இராணுவத் தளபதியாக இருந்து தமிழர்கள் தாயகத்தில் பல்வேறு படை நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழர்களுக்கு மோசமான பின்னடைவுகளை ஏற்படுத்தியதோடு அல்லாமல் தமிழர்களின் அடிப்படை அபிலாசைகளுக்கு எவ்வித ஆதரவினையும் எக்காலத்திலும் வெளிக்காட்டாத சரத் பொன்சேக்காவை அல்லவா ஆதரித்தது! அத்துடன் நின்றுவிடாது தமிழ் மக்களையும் ஆதரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டதைப்பற்றி என்ன சொல்வது?

***குரைத்தால் மட்டும் போதாது!***

வடகிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் எவராக இருந்தாலும் எக்கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் இரத்தம் சிந்திப் போராடி நம் தாய் மண்ணில் மடிந்துபோன மாவீரர்களின் பெயர்களைச் சொல்லித்தான் இன்றுவரை அனைத்துத் தேர்தல்களிலும் வாக்குகளைக் குவிக்கிறார்கள், வெற்றியும் பெறுகிறார்கள். இவ் யதார்த்தத்தை வடகிழக்கில் எத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சியோ, எத்தனி நபரோ மறுக்கமுடியாது என்பதை சவாலாக ஒரு திறந்த பொதுவெளியில் முன்வைக்கிறோம். எமது இவ் அபிப்பிராயத்தை எதிர்த்து யாரும் சவால்களை முன்வைக்கலாம் என்பதையும் வெளிப்படையாகவே அறியத் தருகிறோம்.

ஆகவே, அவர்களின் இரத்தம் ஆபேலின் இரத்தத்தைப்போல நீதி கேட்ட வண்ணமாக இருக்கிறது. எனவே, தமிழர்களின் உரிமைகளைப் பெற – அபிலாசைகளை அடைய மக்களின் பிரதிநிதிகளாக நாய்வேடம் போட்டிருக்கிற குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சும்மா குரைத்துக்கொண்டிருந்தால் மட்டும் போதாது! உரிமையாளனை (மக்களை) காவல் காக்கவேண்டும், உரிமையாளனுக்கு (மக்களுக்கு) விசுவாசமாய் இருக்கவேண்டும், உரிமையாளனுடன் (மக்களுடன்) நன்றியுணர்வுடன் நடந்துகொள்ளவும் வேண்டும்! சிலவேளைகளில் கடிக்கவும் வேண்டும்: உரிமையாளனுக்கோ அல்லது வீட்டுக்காரனுக்கோ அல்ல வீட்டு வேலி - மதில் பாய்ந்து வருகிறவனுக்கு, நல்ல நம்பிக்கைக்குரிய நாயைப்போல! நன்றியுள்ள நம்பிக்கைக்குரிய நாயைப்போல இருப்பார்களா – நடப்பார்களா நம் 'அரசியல் நண்பர்கள்'?

# மன்னார் மறைசாட்சிகள் நினைவு விழா – 2017







* மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையேற்பு.
* தமிழ்நாடு காரங்காடு செங்கோல் அன்னை ஆலயத்தைச் சேர்ந்த மன்னார் மறைசாட்சிகளின் வழித்தோன்றல்கள் (cfr – Schurhammer,G. S.J. Francis Xavier *his life, and his time in India – 1541 -1545. Vol –II, tr by M.Joseph Costelloe, Jesuit historical institute, Rome 1977 – p-471. Foot-note -461.*) குருக்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பு.
* மறைசாட்சிகளின் வழித்தோன்றல்கள்: யாழ்ப்பாணம் புதுமை மாதா கோவில், சாவகச்சேரி, கச்சாய், நீக்கிலார் கோவில் மக்கள் விழாவில் பங்கேற்பு.
* மூல ஆய்வேடுகளின் அடிப்படையில் மன்னார் மறைசாட்சிகள் நாட்டுக்கூத்து புத்தாக்க முறையில் அரங்கேற்றம்.
* ஆய்வாளர் S. அந்தோனிப்பிச்சை அவர்களின் தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகள் கொண்ட ‘மன்னார் மறைசாட்சிகள்’ (Martyrs of Mannar) என்ற கைநூல் (Hand book) வெளியீடு. அந்தத் தொகுப்பின் 9 காட்சிகள் மறைசாட்சிகள் கல்லறையைச்சுற்றி அமைக்கப்பட்டு, முக்கிய பிரமுகர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

வழமைபோல் இவ்வாண்டும் யூலை மூன்றாவது சனிக்கிழமை மறைசாட்சிகள் சமூக அமைப்பால் மன்னார் மறைசாட்சிகள் நினைவு விழா தோட்டவெளியில் கொண்டாடப்பட்டது. 14.07.2017 வெள்ளிக்கிழமை மாலை திருச்செபமாலை ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அவர்களினால் மறைசாட்சிகள் சமூகக் கொடியாகிய பரிசுத்த ஆவியின் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து திருப்பலியின் ஆரம்ப நிகழ்வாக மறைசாட்சிகள் கல்லறைக்கு குருக்கள் சென்று, அந்த நிலத்தை முத்தம் செய்து பிறகு ஆலயப் பீடத்தில் திருப்பலியை ஆரம்பித்தனர். திருப்பலிக்குப்பின் மிகச் சிறப்பான முறையில் இறைவார்த்தைப் பகிர்வு, நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறுகிய இடைவெளிக்குப்பிறகு நாடக ஆசிரியை திருமதி. சுவாந்தா குரூஸ் வசந்தி அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட “மன்னார் மறைசாட்சிகள்” நாட்டுக்கூத்து கலந்த நாடகம் ஆரம்பமானது. முதலாவதாக பிரதம அதிதிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அதன்பின் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் முன்னாள் துணைத் தவிசாளர் திரு. சவுந்தரநாயகம் அவர்கள் தலைமையேற்று வரவேற்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து பிரதம விருந்தினர் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை உரை நிகழ்த்தினார். அந்த உரையில், “இந்த வரலாறு உண்மையானது. இந்த மறைசாட்சிகளுக்கு ஒருநாள் புனிதர் பட்டம் கட்டாயம் கிடைக்கும்” என்று உறுதியாகக் கூறினார்.

அதைத்தொடர்ந்து சிறப்பு உரையாக மன்னார் மறைசாட்சிகள் வழித்தோன்றலும் தமிழ்நாடு காரங்காடு செங்கோல் அன்னை ஆலயத்தை சேர்ந்தவருமான அருட்பணி. T. விண்ணரசு உரை நிகழ்த்தினார். அதில், “எங்களது விசுவாச வேர்களைத் தேடிய பயணம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து அமைப்பின் ஆய்வாளர் S. அந்தோனிப்பிச்சை கூத்தைப் பற்றிய விளக்க உரையை வழங்கினார். “இது ஒரு புத்தாக்கம் நிறைந்தது. மறைசாட்சிய வரலாற்றின் முன்புலம் பின்புலம் இரண்டும் சேர்க்கப்பட்டு இடைச் செருகல்கள் நீக்கப்பட்டு விசுவாசத்தை பெற்றுக்கொள்ளும் விதமாக இந்தக் கூத்து அமைந்துள்ளது” எனக் கூறினார்.

பின்னர் நாடக இயக்குனர் திருமதி. சுவாந்த குரூஸ் வசந்தி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து, “மன்னார் மறைசாட்சிகள்” கூத்து அரங்கேற்றப்பட்டது. மிகச்சிறப்பான முறையில் இனிமையும், அருமையுமாக இக்கூத்து நடைபெற்றது.

மறுநாள் 15.07.2017 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு வழமைபோல் தோட்டவெளிச் சாலையிலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் பாதையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் மன்னார் மறைசாட்சிகளின் வழித்தோன்றல்களின் குருக்கள், ஏனைய குருக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அனைவருக்கும் மாலை அணிவிக்கப்பட்டது. கவிகள் பாடப்பட்டு விருந்தினர்கள் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள்.

இதைத் தொடர்ந்து திருப்பலியின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றப்பட்டது. திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு, காரங்காடு செங்கோல் அன்னை ஆலயத்தை சேர்ந்த மன்னார் மறைசாட்சிகளின் வழித்தோன்றல்களாகிய அருட்பணி. T. விண்ணரசு, அருட்பணி. அமலதாஸ், அருட்பணி. ஜெயசீலன், அருட்பணி. செபஸ்தியாம்பிள்ளை, அருட்பணி. பாலா மற்றும் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. ஜெயபாலன், தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. இம்மானுவேல் செபமாலை அவர்களும் சேர்ந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்கள். அத்தோடு ஆயரின் செயலர் அருட்பணி. நீக்லஸ் அவர்கள் திருப்பலியில் கலந்துகொண்டு சிறப்பித்தார். திருப்பிலியில் அருட்பணி. விண்ணரசு அவர்கள் மறையுரையாற்றினார்கள். அவரது உரையில், “மன்னார் மறைசாட்சியம், குழந்தைத் திருச்சபை ஆனால் இது முதுமையடைந்த விசுவாசம் கொண்டது. இங்கிருந்து தப்பியவர்கள் காரங்காடு சென்றடைந்தார்கள்” எனக் கூறினார்.

திருப்பலியைத் தொடந்து சமூக அமைப்பின் நிகழ்வுகள் நடைபெற்றது. தோட்டவெளிப் பங்குத்தந்தை தலைமையேற்க மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக பங்குபற்றினார். முதலாவதாக அமைப்பின் ஆய்வாளர் திரு. S. அந்தோனிப்பிச்சை அவர்களினால் தமிழிலும், ஆங்கிலத்திலும் சேர்ந்து எழுதி வடிவமைக்கப்பட்ட (ஆய்வு முறை) கைநூல் “மன்னார் மறைசாட்சிகள், Martyrs of Mannar” என்ற கைநூல் வெளியிடப்பட்டு முதல் பிரதியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆண்டகை பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு, காரங்காடு செங்கோல் அன்னை ஆலயத்திலிருந்து வருகைதந்த மறைசாட்சிகளின் வழித்தோன்றலும், கிராம முக்கியஸ்தரும், தொழிலதிபருமான திரு.டென்சிங் அவர்கள் உரையாற்றினார். அதன்பின் மன்னார் மறைசாட்சிகளின் சமூக அமைப்பு சார்பாக முக்கியஸ்தர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் சர்வதேச 4வது றோல்போல் (Roll Ball) விளையாட்டு நிகழ்வில் போட்டியில் கலந்துகொண்ட மறைசாட்சிகளின் வழித்தோன்றலான செல்வி. ஜோசப் கென்னடி திவ்யா (பாவிலுப்பட்டான்கட்டி குடியிருப்பு) அவர்களுக்கு நினைவு பரிசில்களும், ஊக்கத்தொகையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், 2016ஆம் ஆண்டில் புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள், 2016ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்களும், ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டது.


**(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)**

# புனிதர்களின் பாதையில்

## புனித அகுஸ்தீன்

***ஆயர், மறைவல்லுநர்***

***(கி.பி. 354 - 430)***




**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

இப்போ நகரின் ஆயர் இவர். மறைவல்லுநர். ஏறத்தாழ 100 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இவரது இறுதிக் கல்வியை நல்ல முறையில் முடிக்க இவரின் பெற்றோர் இவரைக் கார்த்தேஜ் நகருக்கு அனுப்பினர். தாய் மொணிக்கா இவரை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகளுக்கு நேர்மாறாகச் சிற்றின்பத்திலும் மனிக்கேயம் என்ற தப்பறையான கொள்கையிலும் இவர் ஊறிப்போயிருந்தார். தாய் மொணிக்காவின் மன்றாட்டினால் மனந்திரும்பினார்.

சிசரோ இலத்தீன் மொழியில் எழுதிய “ஹோர்டென்சியஸ்” என்ற நூலைத் தமது 19 வயதிலேயே ஆவலுடன் கற்றார். அப்போதிருந்தே அவருக்கு உண்மை ஞானத்தைப் பருகிக்கொண்டு இருக்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. இந்நிலையில் மறைநூலையும் கற்றார். ஆனால் அதில் அவ்வளவு ஈடுபாடு ஏற்படவில்லை. தகாஸ்டே, கார்த்தேஜ், உரோமை, மிலான் ஆகிய நகரங்களுக்குச் சென்று உயர்ந்த கலைகளைக் கற்றுத் தேர்ந்தார்.

30ஆவது வயதில் மனிக்கேயத் தப்பறையைச் சிறிது சிறிதாகத் தவறு என்று உணர்ந்தபோதுதான், மிலான் நகரில் அம்புரோசியாரின் அன்பு அரவணைப்புக்குள் வந்து சேர்ந்தார். அவரது இனிய மறையுரை அகுஸ்தினைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கவர்ந்தது. மறைநூலை மீண்டும் படித்தார். இந்நிலையில் இவர், “ஆண்டவரே, எனக்குக் கற்பு என்னும் புண்ணியத்தைத் தாரும், ஆனால் சிறிது காலம் தாழ்த்தி” (வெளியீடு 8,7) என்ற ஒரு வேடிக்கையான மன்றாட்டை எழுப்பியதாக இவரே எழுதி உள்ளார்.

அப்போதுதான் ஒரு நாள் தனது இல்லத்தில் இவர் தனிமையாக அமர்ந்திருந்தார். சிறுவன் ஒருவன் தோன்றி “எடுத்துப் படி” என்று மூன்று முறை சொல்லிவிட்டு மறைந்தான். அருகிலிந்தது மறைநூல். அதை எடுத்தார், படித்தார். “இரவு முடியப்போகிறது, பகல் அன்மையிலுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்துகொள்வோமாக” (உரோ 13,12) என்ற பகுதியைப் படித்ததும் எழுந்தார். சிந்தித்தவாறே அம்புரோசியாரைத் தேடிச்சென்றார். அவரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

இறைவன் இவரது தீச்செயல்களை மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தனது 32ஆவது வயதில் முற்றிலும் மனம் மாறியவராய்த் திருநீராட்டுப் பெற்றார்.

4 ஆண்டுகளுக்குப்பின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 42ஆவது வயதில் ஆயராக உயர்த்தப் பெற்றார். துறவற வாழ்க்கையை விரும்பிய பலரையும் சேர்த்து ஒரு சபையையும் நிறுவினார். “உன் வாழ்க்கையில் நீ புரியும் செயல்களுக்கு நீயே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ புரியும் செயல்களுக்கு அலகையோ அடுத்தவர்களோ பொறுப்பல்லர். எனவே கண்ணியமாக நடந்து உனது ஆன்மாவை இறை உதவியுடன் மீட்டுக்கொள்” என்பதே அகுஸ்தீன் உலக மக்களுக்குக் கற்றுத்தரும் பாடம்.

“என்றுமே அழகின் முழுமையானவரும், எல்லாக் காலங்களிலும் அழகே உருவானவருமான அருட்பெருஞ்சோதியே! இறைவா, உம்மை நான் புரிந்துகொண்டு அன்பு செய்வதற்கு எவ்வளவு பின்தங்கிவிட்டேன்! உண்மையாகவே உம்மை அன்பு செய்ய நான் பிந்திவிட்டேன். நீர் என்னுள் குடியிருந்தீர். ஆனால் நானோ வெளியுலகில் அலைந்து திரிந்தேன். வெட்ட வெளியில் உம்மை வீணாகத் தேடித்திரிந்தேன். உமது கைவேலையாகிய அழகிகளிடம் மட்டுமே என் நெஞ்சைப் பறிகொடுத்தேன். நீர் என்னுள் இருக்க, நான் உம்மோடு இல்லாதிருந்தேன். படைப்புப் பொருட்கள் உம்மை என்னைவிட்டு மிகுந்த தொலைவில் பிரித்துவிட்டன. நீர் என்னை அழைத்தீர், ஒலித்தீர், என் செவிகளைத் துளைத்தது உமது பேரொலி. உமது ஒளியும் ஒளிர்ந்துகொண்டிருந்தது! என் கண்களையே மங்க வைத்தது. இப்போது உம்மீது மட்டுமே எனக்குப் பசியும், தாகமும், நீர் என்னைத் தொட்டதுதான் தாமதம். நீர் தரும் பேரமைதிக்காக நான் உருகி நிற்கிறேன்” என்பவை புனித அகுஸ்தீன் இறைவனில் ஊறிக் கூறிய மொழிகள்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்


## முருங்கன் ஜெயா பாலாஜியின் கவிதைகள்

### ஒரு வேண்டுதல்

எத்தனை உற்சாகமானதாக காலை ...!
இரம்மியமாய் - விரும்பத்தக்கதாய் -
நம்பிக்கையூட்டுவதாய்....

எதையெல்லாம் செய்துமுடிக்கலாம்
என்கின்ற ஆர்வமூட்டுவதாய் ....
"எழுதுகோல் எடு"
என்று தூண்டுவதாய்
இறையே உன் பூரணத்துவத்தை
ஒவ்வொன்றிலும் கண்டுகொள்வதாய்
பூக்கள் விரிகின்ற முதல் நிமிடத்தில்
புன்னகையைப் பரிசளித்து
சூரியனுக்குக்
காலை வணக்கம் சொல்லி
உறவுகளை உயிர்ப்போடு கவனித்து
எவ்வளவு உற்சாகமான காலை
இரம்மியமாய் - விரும்பத்தக்கதாய் -
நம்பிக்கையூட்டுவதாய்...

மாலையோ சோர்வும் கலக்கமுமாய்
பகல் பட்டென்று பறந்து போக
இரவோ நீண்டதாய் அச்சமூட்டுவதாய்
பெரிய வருத்தங்களும் .....
சின்னதாய் தெரிகின்ற பகல்
சின்ன வருத்தங்களும்.....
பெரிதாய் தெரிகின்ற இரவு
என் காலைப் பொழுதுகள்போல்
மாலைகளும் இருக்கட்டும்
இரவும் பகல்போல ஒளிரட்டும்
இறைவா கட்டளையிடு!



### கலைஞருக்கு

முத்தமிழ் வித்தகரே
அறிஞரே கலைஞரே
உங்களுக்கு விழா எடுக்கின்ற
வேளையிலே வாழ்த்துகின்றோம்.
உங்கள் தமிழை இரசித்த உருசித்த
நன்றியோடு சின்னஞ் சிறுமியாய்
நெஞ்சில் பதிந்த உங்கள் தமிழ் ஒன்று,
அறிஞர் அண்ணாவுக்கு நிகழ்ந்த ஒரு
கவியரங்கில் உங்கள் வரிகள்:
"அண்ணனுக்கு **கவிஞரங்கம்**
நடத்துகிறோம்.
அண்ணனே ஒரு **கவிஞரங்கம்.**
புவியரங்கம்மீது பூவரங்கம்
அமைத்துக்கொண்டு திருவரங்கத்
துயில்கொள்ளும் தெய்வம் அவர்"
இப்படி எத்தனை எத்தனை வரிகள்...
வாழ்த்துக்கள் தங்களுக்கு - தங்கள்
தமிழுக்கு வாழ்த்துக்களோடு ஒரு
வார்த்தையும் தயவோடு ...
உங்களை முழுமனதோடு வாழ்த்த
முடிந்திருக்கும் நீங்கள் கலைஞர்
கருணாநிதியாக மட்டும் இருந்திருந்தால்
ஒரு அரசியல்வாதியாகவும்
இல்லாமல்.........

### சந்திரமதிகள்

அரிச்சந்திரனின் சந்திரமதியாய்
ஆரம்பிக்கிறது வாழ்க்கை ஆரவாரமாய்
அந்தணனின் சந்திரமதியாய்
முடிகிறது பெண்ணின் வாழ்க்கை
அவலமாய் - அவமாய்
அடுக்களை தோறும்
அந்தணன் வீட்டு சந்திரமதிகள்.

### மின்சாரம்

"சம்சாரம் அது மின்சாரம்"
பழைய ஒரு திரைப்படம்
அதுவே தலைப்பாய்....
ஒரு பாடலும் அத்திரைப்படத்தில்
"சம்சாரம் அது மின்சாரம்".
நேற்று பக்கத்து வீட்டில் ஒரு
உரையாடல்
காற்று வாக்கில் காதில் விழுந்தது...
"பகல் முழுவதும் வீட்டில் இல்லாமல்
எங்கே போகிறீர்கள்?" - மனைவி
"கரண்ட் இல்லாமல்
வீட்டில் இருந்து என்னதான்
செய்வது"? - கணவன்
பாடலை மாற்றிப் பாடிப்பார்த்தேன்.
மின்சாரம் அது சம்சாரம்
மின்சாரம் அது சம்சாரம்.

### பாவம் பாரதி

"உன் கண்ணில் நீர் வழிந்தால் - என்
நெஞ்சில் உதிரம் கொட்டுதடி"
பாரதியை ஆதாரமாக்கி
நீ பக்கம் பக்கமாக வரைந்ததெல்லாம்
என் பெட்டியில் பத்திரமாயிருக்க
இன்று என் நெஞ்சில் உதிரம்
கொட்டுகிறதே
எங்கே உன் கண்ணில் நீர்?
பாவம் பாரதி







# குடும்பக் குறிப்புகள்.



- எலுமிச்சம் பழத்தின் தோல்களை குளிர்சாதனப் பெட்டியில் போட்டு வைத்தால், திறக்கும்போது இனிய மணம் வரும்.
- மெழுகுதிரிகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு, தேவையான நேரத்தில் எடுத்து உபயோகித்தால் கூடிய நேரம் எரியும்.
- மின்சாரம் தடைப்படுகின்ற வேளையில் மெழுகுதிரியைக் கொளுத்தி நிலைக்கண்ணாடியின் முன் வைத்துவிட்டால் அறைமுழுவதும் வெளிச்சமாக இருக்கும்.
- பிளாஸ்ரிக் பாத்திரங்கள், போத்தல்களை சமையல் உப்பின் கரைசலினால் குலுக்கிக் கழுவினால் பிளாஸ்ரிக் வாடை இல்லாமல் போகும்.
- வெள்ளிப்பாத்திரங்கள் இடையே கற்பூரங்களை வைத்தால் பாத்திரங்கள் கறுக்காது.
- தங்க வளையல்கள் தேய்வதைத் தடுக்க வேண்டுமானால், வெள்ளி, கவரிங், கண்ணாடி போன்ற பிற வளையல்களை தங்க நகைகளுடன் அணிவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- பித்தளைப் பாத்திரங்களை சோறுவடித்த கஞ்சியில் நன்றாக ஊறவைத்து, பின்னர் அதனை காற்றிலே உலரவைத்தபின் விலக்கினால் (மினுக்கினால்) பளபளவென்று பிரகாசிக்கும்.
- வீட்டில் எலித்தொல்லை அதிகமாக இருந்தால், எலி நடமாடும் இடங்களில் கருப்பு மிளகை அல்லது புகையிலை போட்டுவைத்தால் எலித்தொல்லை குறையும்.
- எறும்புகள் நடமாடும் இடங்களில் வெள்ளரித்தோலை வைத்தால் எறும்புத் தொல்லை குறையும்.
- சட்டையில் ஒட்டியுள்ள பபிள்கம் நீக்க, அந்த சட்டையை குளிர்சாதன பெட்டியின் பிரீசரில் வைத்துவிட்டு, கொஞ்சம் நேரம் கழித்து எடுத்துப்பார்த்தால் போதும்.
- ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு, அதில் பச்சை கற்பூரத்தைப் போட்டு வைத்தால், அதில் இருந்து வரும் வாசனைக்கு கொசுக்கள் வீட்டை எட்டிக்கூட பார்க்காது.
- சட்டையில் உள்ள இன்க் (மை) கறை போக வேண்டுமென்றால், கறை உள்ள இடத்தில் டூத் பேஸ்டை தேய்த்து, அதை காயவிட்டு, பின்னர் துவைத்தால் போகும்.
- எலுமிச்சையிலிருந்து அதிக சாறு எடுக்க வேண்டுமென்றால், பிழியும் முன்னர் ஒரு மணி நேரத்திற்கு வெந்நீரில் எலுமிச்சையை ஊறவைத்தால் போதும்.
- உருளைக்கிழங்கு தோலை எளிதாக உரிக்க, வேக வைத்து எடுத்ததும் உடனே குளிர்ந்த நீரில் போட்டு வைத்தால் எளிதாக உரிக்கலாம்.
- கீரைகளை மூடிப்போட்டு சமைக்கக் கூடாது. காய்கறிகளை ரொம்பவும் பொடியாக நறுக்கக்கூடாது. இதனால் சத்துக்கள் வீணாவதை தவிர்க்கலாம்.

**- ஜெயா பாலாஜி, முருங்கன்**

# கொஞ்சம் சிரிங்க



**ஆசிரியர்** : மாணவர்களே, நான் ஒரு பழமொழி சொல்வேன். அதை நீங்கள் முடிக்கவேணும் உப்பிட்டவரை....
**மாணவர்கள்** : உலக்கையால் அடி....

..................................

**கணவன்** : ஏண்டி மரக்கறிக் கடையில அம்புலன்ஸ் நிக்கிது.
**மனைவி** : அது வேறொன்றும் இல்ல, மரக்கறி விலையைக் கேட்டு ஆக்கள் மயங்கிட்டாங்களாம் அதுதான்.

..................................

**ஆசிரியர்** : நம் நாட்டில் தேனும் பாலும் பெருகி ஓடினால் எப்படி இருக்கும்?
**மாணவன்** : எறும்புக்கடி அதிகமாய் இருக்கும்.

..................................

**விமல்** : நீ ஏண்டா சுற்றுலாவிற்கு வரவில்லை?
**கமல்** : போய் வந்த பிறகு ஆசிரியர் கட்டுரை எழுதச் சொல்வார்.

..................................

**சுரேஸ்** : நேத்து உன் மனைவிக்கும் அம்மாவுக்கும் நடந்த சண்டையில யாருக்குப் பின்னாடி நீ நின்ன?
**ரமேஸ்** : போடா, நான் பத்திரமா பீரோக்கு பின்னாடி போய் நின்னுகிட்டேன்.

..................................

**வாத்தியார்** : தென்னை மரத்தில இருந்து 6 இலையும் பனை மரத்தில இருந்து 6 இலையும் கீழே விழுகுது. இரண்டையும் கூட்டினால் என்ன வரும்:
**மாணவன்** : குப்பைதான் வரும்.

**ஆசிரியர்** : கணக்கு பரீட்சையில எல்லாக் கேள்விக்கும் ஏணிப்படியை வரைஞ்சு வச்சிருக்கிறியே, ஏண்டா?
**மாணவன்** : கணக்குல ஸ்ரெப்புக்குத்தான் (படிமுறைக்குத்தான்) மார்க்குன்னு நீங்கதானே சார் சொன்னீங்க!

..................................

**நிசாந்** : இரண்டு கழுதை கணக்குப் போட்டா எப்படி இருக்கும்?
**சுரேஸ்** : தெரியலையே?
**நிசாந்** : எங்கேயாவது உதைக்கும்.

..................................

**அமல்** : ஒரு ரயில் நிதானம் இல்லாமல் தள்ளாடி தள்ளாடி வருது ஏன் சொல்லு?
**விமல்** : தெரியலையே
**அமல்:** அது சரக்கு ஏத்திக்கிட்டு வந்த சரக்கு ரயில்.

..................................

**நோயாளி** : தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடனுமா... என்னால முடியாது டாக்டர்.
**டாக்டர்** : ஏன் முடியாது?
**நோயாளி** : ஏன்னா எங்க கோழி வெள்ளை முட்டைதான் போடும்.

# மன்னா விளம்பரப் பலகை

கை ரேகையைப் பார்த்து உன் எதிர்காலத்தை நம்பிவிடாதே? ஏனென்றால் கை இல்லாதவனுக்கும் எதிர்காலம் உண்டு. மறந்துவிடாதே!

உன் தவறைப் பாராமல் மற்றவர் தவறைச் சுட்டிக்காட்டாதே! நீ பிறரை மன்னித்தால்தான் பிறரும் உன்னை மன்னிப்பார். பிறரை நேசிக்கவும் மதிக்கவும் மன்னிக்கவும் பழகு. இறைவன் உன்னை மிகுதியாக ஆசீர்வதிப்பார். மனிதராகப் பிறந்தவர் தவறு செய்வது இயல்பு. அத்தவறை உணர்ந்து மனம் வருந்தல் நல்ல பண்பு. தவறு செய்த பின்னர் மனம் வருந்துவதைவிட அதைச் செய்யுமுன் அதைப்பற்றிச் சிந்திப்பது நல்லது.

விலகி நிற்பவன் வெல்லுவதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.

..............................

முடியும் என்று தெரிந்தால் முயற்சி எடு:
முடியாது என்று தெரிந்தால் பயிற்சி எடு.

மகிழ்ச்சி எனும் கோட்டையின் முதல் வாயில் அமைதி. நம்மைக் காப்பாற்றுபவை நீதி, தன்னடக்கம், உண்மையான எண்ணம் ஆகியவைதாம். ஒழுக்கம் பிச்சைக்கார வடிவத்தில் இருந்தாலும் மதிப்பளிக்கப்படும். தெய்வ பக்தியோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

..................................

அன்பு உன் வாழ்வில் வெளிப்படாவிட்டால் அது அநீதியான வாழ்வே.
ஏதாவது ஒரு வழியில் உன் வாழ்வு பிறருக்கு உதவாவிட்டால் அதை வாழ்ந்து பயனில்லை.

வாழ்க்கைப் படிகளின் மேலே ஏறும்போது வழியில் சந்திப்பவர்களுடன் அன்பாக இருக்க வேண்டும். ஏனென்றால் இறங்கி வரும்போது அவர்களைச் சந்திக்க நேரிடும்.

# சமையல் குறிப்பு

## பலாப்பழக் கட்லட்

### தேவையானவை:



பலாப்பழச் சுளை - 20
சர்க்கரை வள்ளிக்கிழங்கு - 4
சீனி - 100 கிராம்
பாண் - 5 துண்டுகள்
பாண் தூள் - ஒரு கப்
பால் - ஒரு டம்ளர்
ஏலக்காய் தூள் - ஒரு கரண்டி
நெய் - ஒரு மேசைக்கரண்டி



### செய்முறை :

கிழங்கை வேக வைத்து தோல், நார் நீக்கி நன்றாக உதிர்க்கவும். பாணை பாலில் ஊறவைத்து நன்றாக பிசைந்து வைத்துக்கொள்ளவும்.

பலாச்சுளைகளை நறுக்கிப்போட்டு மிக்ஸியில் நன்கு அரைக்கவும்.

சீனியை பாகுபோல் காய்ச்சி அதில் உதிர்த்த சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பிசைந்த பாண், ஏலக்காய் தூள், பலாப்பழச்சுளை சேர்த்து 10 நிமிடம் கிளறவும். அந்தக் கலவையை நன்றாகப் பிசைந்து வடை போல் தட்டி, பாண் தூளில் அதைப் புரட்டி, நெய் தடவிய தோசைக்கல்லில் போட்டு வெந்தவுடன் திருப்பிப் போடவும். பொன்னிறமானதும் எடுத்து விடவும். பலாப்பழக் கட்லட் தயார்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 20 -

**393. பாஸ்காத் திருவிழிப்புச் சடங்கில் திருச்சபை நிறைவேற்றும் சடங்குகள் எவை? அவற்றின் சிறப்பு அம்சங்கள் என்ன?**

**'புனித விழிப்புகளுக்கு எல்லாம் அன்னையாக'**க் கருதப்படும் பாஸ்காத் திருவிழிப்பு கொண்டாட்டத்தில் நிகழும் சடங்குகள் நான்கு:

அ) திரு ஒளி வழிபாடு:- பாவ இருளை அகற்றுவதை நினைவூட்டுகிறது.

ஆ) வார்த்தை வழிபாடு:- மீட்பின் வரலாற்றை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

இ) திருமுழுக்கு வழிபாடு:- திருமுழுக்கு வாக்குறுதியால் நம்மைப் புதுப்பித்தல் நடைபெறுகிறது.

ஈ) நற்கருணை வழிபாடு:- இறந்து, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் நம்பிக்கையாளர் திருக்கூட்டம் முழுமையாக ஒன்றிணைகிறது. விண்ணக விருந்து முன்சுவைக்கப்படுகிறது.

**394. திரு ஒளி வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள் என்ன?**

அ) புதிய நெருப்பைப் புனிதப்படுத்துதல்

ஆ) பாஸ்காத் திரியைப் புனிதப்படுத்துதல்

இ) பாஸ்காத் திரி பவனி, ஈ) பாஸ்காப் புகழுரை.

**395. இச்சடங்கின்போது ஏன் கோவிலின் விளக்குகள் அணைக்கப்பட்டு, மீண்டும் ஏற்றப்படுகின்றன?**

இது பழைய கட்டளை மாறிப்போனதையும் இப்போது புதிதாக புனிதப்படுத்தப்பட்ட நெருப்பு இருளை வென்ற உலகின் ஒளியாகிய இயேசுக் கிறிஸ்து அருளிய புதிய கட்டளையையும் குறிக்கிறது.

**396. புதிய நெருப்பு என்பது என்ன?**

கோவிலின் வாயில் அருகே அருள்பணியாளர் சிக்கிமுக்கிக் கல்லிலிருந்து தட்டிய நெருப்பை அல்லது வேறு வகையில் எடுத்துக்காட்டாக ஏற்கெனவே மரக்கட்டையினால் உருவாக்கப்பட்ட நெருப்பைப் புனிதப்படுத்துகிறார். இதுதான் புதிய நெருப்பு.

**397. புதிய நெருப்பு எதைக் குறிக்கிறது?**

புதியதாக உருவாக்கப்பட்ட நெருப்பானது இருளையும் சாவையும் வென்று, பெரும் மாட்சியோடு கல்லறையினின்று உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறிக்கிறது.

**398. பாஸ்காத் திரி எவ்வாறு புனிதப்படுத்தப்படுகிறது?**

1. எழுத்தாணி கொண்டு ஒரு பெரிய தேன் மெழுகுதிரியில் ஒரு சிலுவையையும் 'அ' 'ன' எழுத்துக்களையும் நடப்பு ஆண்டின் இலக்கத்தையும் வரைகிறார்.
2. மந்திரிக்கப்பட்ட ஐந்து சாம்பிராணி மணிகளை அதில் சிலுவை அடையாளமாய்ப் பதிக்கிறார்.
3. புதிய நெருப்பினின்று கொளுத்தப்பட்ட ஒரு சிறு மெழுகுத்திரியைக் கொண்டு அப்பெரிய மெழுகுத்திரியை ஏற்றி, அதற்குரிய மன்றாட்டினால் அதைப் புனிதப்படுத்துகிறார்.

**399. ஐந்து சாம்பிராணி மணிகள் எதைக் குறிக்கின்றன?**

ஐந்து சாம்பிராணி மணிகள் இயேசுவின் ஐந்து திருக்காயங்களைக் குறிப்பதுமன்றி அவருடைய அடக்கத்தின்போது உபயோகிக்கப்பட்ட பரிமளப் பொருளையும் நினைவூட்டுகிறது.

**400. பாஸ்காத் திரி எதைக் குறிக்கிறது?**

பாவத்தின் அடையாளமான உலகின் இருளைப் போக்கி, வாழ்வின் அடையாளமான உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சுட்டிக்காட்டுவதுதான் பாஸ்காத்திரி. பாலைநிலத்தில் யூதர்களுக்கு வழிகாட்டிய நெருப்புத் தூண் இதற்குப் பின்புலமாக இருக்கிறது.

இன்றுமுதல் பெந்தக்கோஸ்துப் பெருவிழா வரையிலும் இம்மெழுகுதிரி ஏற்றப்படும்.

**401. பாஸ்காத் திரியைப் புனிதப்படுத்தியபின் நடைபெறும் சடங்கு எது?**

அருள்பணியாளர் பாஸ்காத் திரியைக் கையில் ஏந்தி பீடத்திற்குப் பவனியாகச் செல்கிறார். அப்போது 'கிறிஸ்துவின் ஒளி இதோ' என மும்முறை படிப்படியாக உயர் தொனியில் பாட, 'இறைவனுக்கு நன்றி' என இறைமக்கள் பதில் அளிக்கின்றனர். கோவிலின் வாயிலில், கோவிலின் நடுவில், பீடத்தின் அருகில் என மூன்று இடங்களில் இம்முழக்கம் இடம்பெறும். இறுதியாக இத்திரியானது பலிப்பீடத்தின் முற்றத்தில் வைக்கப்படுகிறது.

அருள்பணியாளர் இரண்டாம்முறை, 'கிறிஸ்துவின் ஒளி இதோ' என்று பாடும்போது, இறைமக்கள் அனைவரும் தம்தம் திரிகளையும் ஏற்றிக்கொள்கின்றனர். மூன்றாம் முறையாக பாடி முடித்ததும் கோவிலின் மற்ற விளக்குகளும் ஏற்றப்படுகின்றன.

இதன்பின், மகிழ்ச்சிகரமான பாஸ்காப் புகழுரை (Exultet) பாடப்படுகிறது. இப்பாடல் முடிவடைந்ததும் இறைமக்கள் தங்கள் திரிகளை அணைத்துவிடுகின்றனர்.

**குறிப்பு:-** திருத்தொண்டர் இச்சடங்கில் பங்குபெற்றால் அவரே இப்பவனியைச் சிறப்பிப்பார். பாஸ்காத் திரியை வாசக மேடை அருகில் வைப்பது பொருத்தமானது.




**402. பாஸ்காப் புகழுரையை யார் பாடலாம்?**

அருள்பணியாளரோ திருத்தொண்டரோ தேவையானால், பாடகர் ஒருவரோ பாடலாம்.

**403. பாஸ்காத் திருவிழிப்புச் சடங்கில் வார்த்தை வழிபாட்டின் சிறப்பு அம்சம் என்ன?**

இன்றைய திருவிழிப்புச் சடங்குத் திருப்பலியில் மொத்தம் ஒன்பது வாசகங்கள் உண்டு. பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழும் புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டும் இடம்பெறுகின்றன. பழைய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கப்படும் வாசகங்களின் எண்ணிக்கையை வசதிக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம். ஆனால், விடுதலைப் பயண நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள பகுதி கண்டிப்பாக வாசிக்கப்பட வேண்டும்.

**404. பழைய ஏற்பாட்டிலிருந்து ஏன் இத்தனை வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன?**

திருச்சபைத் தொடக்கத்தில், திருமுழுக்கு பெற ஆயத்தமாய் இருப்பவர்களுக்கு இந்நாளில் திருமுழுக்கு கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஆகையால் அச்சமயத்தில் அவர்கள் மறை உண்மைகளைப்பற்றிய செய்திகளை முழுமையாக அறியும்பொருட்டு திருமுழுக்குத் தொடர்பான பகுதிகள் பழைய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கப்பட்டன. இப்பொழுது அது பின்பற்றப்படுகிறது.

மீட்பின் வரலாற்றில் இறைவன் புரிந்த வல்ல செயல்களை இந்த வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. பழைய ஏற்பாட்டில் தொடங்கிய இறைவனின் மீட்புத் திட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்து, காலம் நிறைவுற்றபோது கிறிஸ்துவில் முழுமை பெறுவதை பாஸ்கா திருவிழிப்பின் வாசகங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

**405. கோவில் மணிகள் எப்போது ஒலிக்கப்படுகின்றன?**

'உன்னதங்களிலே' எனும் மகிழ்ச்சி நிறைந்த வானவர் பாடலைப் பாடும்போது மீண்டும் கோவில் மணிகள் எழுப்பப்படுகின்றன.

**406. திருமுழுக்கு வழிபாட்டின்போது இடம்பெறும் சடங்குகள் யாவை?**

1. புனிதர்கள் மன்றாட்டுமாலை,
2. திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குதல்
3. திருமுழுக்கு அளித்தல்
4. (திருமுழுக்கு வழங்கப்படவில்லையெனில்) தண்ணீருக்கு ஆசி வழங்குதல்,
5. திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்,
6. இறைமக்கள்மேல் தீர்த்தம் தெளித்தல்.

**407. திருமுழுக்குத் தண்ணீரின் சிறப்புத் தன்மைகள் யாவை?**

திருமுழுக்குத் தண்ணீரை புனிதப்படுத்தும்போது அருள்பணியாளர் சொல்லும் வேண்டல்களும் நிறைவேற்றும் சடங்குகளுமே திருமுழுக்கு நமக்கு அளிக்கும் பயன்களை எடுத்துக் காட்டுகின்றன.

1. யோர்தான் நதியில் இயேசு பெற்ற திருமுழுக்கைக் குறிக்கும்படி அருள்பணியாளர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் பாஸ்காத் திரியைத் தண்ணீரில் ஒரு முறையோ மும்முறையோ அமிழ்த்தி, உயர்த்துகிறார்.

2. தூய ஆவியார் தண்ணீரில் இறங்கி வரும்படியாகவும் அருள்பணியாளர் மன்றாடுகிறார்.

**408. திருமுழுக்கு வாக்குறுதி ஏன் புதுப்பிக்கப்படுகிறது?**

இறை - மனித உறவைப் புதுப்பித்துக்கொள்வதற்காகவும் இயேசுவின் சீடராக அதிக முனைப்போடு வாழ்வதற்காகவும்.

### 4.2.4. பாஸ்காக் காலம்

**409. பாஸ்கா எனும் சொல்லின் பொருள் என்ன? அது எதைக் குறித்துக் காட்டுகிறது?**

'பாஸ்கா' – என்பது எபிரேய மொழிச் சொல். 'கடந்து செல்லுதல்' என்பது இதன் பொருள். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டினின்று செங்கடல் வழியாகக் கடந்து சென்று மீட்கப்பட்டதையும் செம்மறியின் இரத்தத்தால் கடவுளின் கோபத்தினின்று அவர்களுடைய தலைச்சன் பிள்ளைகள் காப்பாற்றப்பட்டதையும் நினைவுப்படுத்துவதற்காக அவர்கள் "பாஸ்கா" திருநாளைக் கொண்டாடினார்கள்.

**410. புதிய ஏற்பாட்டு பாஸ்கா என்பது என்ன?**

இயேசுவின் உயிர்த்தெழுதலால் நாம் அனைவரும் சாத்தான், பாவம், சாவு இவற்றின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பதுதான் புதிய பாஸ்கா. எனவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஞாயிறு 'பாஸ்கா ஞாயிறு' எனப்படுகிறது.

**411. பாஸ்காக் காலம் எதுவரை நீடிக்கும்?**

தூய ஆவியார் பெருவிழாவரை நீடிக்கும்.

**412. பாஸ்காத் திருநாளுக்குப் பின்வரும் 40-ஆம் நாளில் என்ன திருநாள் கொண்டாடப்படுகிறது?**

இயேசு விண்ணேற்றம் அடைந்த திருநாள்

**413. பாஸ்காக் காலத்தில் கொண்டாடப்படும் மற்றொரு மிகப்பெரிய விழா எது?**

பெந்தக்கோஸ்துப் பெருவிழா

**414. பெந்தக்கோஸ்துப் பெருவிழா நமக்கு எதை நினைவுப்படுத்துகிறது?**

தூய ஆவியார் திருத்தூதர்கள்மேல் நாக்கு வடிவில் நெருப்பு போன்று இறங்கிவந்ததை நினைவுப்படுத்துகிறது.

**415. தூய ஆவியார் பெருவிழா 'பெந்தக்கோஸ்துப் பெருவிழா' என ஏன் அழைக்கப்படுகிறது?**

பெந்தக்கோஸ்து என்ற கிரேக்கச் சொல்லுக்கு "ஐம்பதாவது" என்று அர்த்தமாகும். பழைய ஏற்பாட்டின்படி, பாஸ்காப் பெருவிழாவிற்குப் பிறகு ஐம்பதாம் நாளில் யூத மக்கள் தங்களுக்கு சீனாய் மலையில் கடவுள் தோன்றி பத்துக்கட்டளைகளைக் கொடுத்ததன் நினைவாக, ஒரு திருநாள் கொண்டாடிவந்ததால், அத்திருநாளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின்படி நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளில் தூய ஆவியார் திருத்தூதர்கள்மேல் இறங்கிவந்தபடியால், அந்நாளுக்கும் அதே பொருள் நிலையாயிற்று.

இந்த ஐம்பது நாள்களும் 'ஒரே விழா நாளா'க / ஒரே 'மாபெரும் ஞாயிறாக'க் கொண்டாடப்படுகிறது.

**416. பெந்தக்கோஸ்து நாளை ஏன் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம்?**

ஏனெனில், தூய ஆவியார் இறங்கி வந்த நாளில் திருச்சபை பிறந்தது என்றே சொல்ல வேண்டும். இந்நாளில்தான் திருத்தூதர்கள் நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிக்கத் தொடங்கினார்கள். ஆகையால், திருச்சபை தூய ஆவியாரின் திருநாளை மிகச்சிறப்புடன் கொண்டாடுகிறது.

**குறிப்பு:-** இறையன்பு – நெருப்புக்கு அடையாளமாக சிவப்பு உடைகளை திருச்சபை பயன்படுத்துகிறது.

**417. பெந்தக்கோஸ்துப் பெருவிழாவுக்குப் பின்வரும் எட்டாம் நாளில் கொண்டாடப்படும் திருவிழாவின் பெயர் என்ன?**

'தூய மூவொரு கடவுள்' திருவிழா. இந்நாளில் கடவுளை இறைத்தன்மையில் ஒருவராகவும் ஆள்வகையில் மூவராகவும் சிறப்பாக வழிபடுகிறோம்.

**418. தூய மூவொரு கடவுள் பெருவிழாவுக்குப் பின்வரும் நம் ஆண்டவரின் முக்கியமான திருநாள்கள் எவை?**

கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா, இயேசுவின் திருஇதயத் திருவிழா.

**419. கிறிஸ்துவின் திருஉடல், திரு இரத்தப் பெருவிழா என்பது என்ன?**

பெரிய வியாழக்கிழமையன்று இந்த அருளடையாளம் ஏற்படுத்தப்பட்ட திருநாளைக் கொண்டாடும்போது புனித வாரத்தின் துயரச் சடங்குகளின் பொருட்டு அதை சிறப்போடும் மகிழ்ச்சியோடும் கொண்டாட முடியாது. எனவே இவ்வருளடையாளத்தைச் சிறப்பாகக் கொண்டாடும்படி தூய மூவொரு கடவுள் பெருவிழாவுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்நாளுக்கென ஒதுக்கப்பட்டு, இந்நாளில் நற்கருணைக்கு வெளிப்படையான ஆராதனை செலுத்தும்படி நற்கருணைப் பவனி மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

**420. இயேசுவின் திருஇதயத் திருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது? அதன் நோக்கம் என்ன?**

இவ்விழா கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தம் விழாவுக்குப் பின்வருகின்ற வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது. இயேசு மானிடக்குலத்தின்மீது காண்பிக்கும் அன்பின் அடையாளமும் இருப்பிடமுமாகிய அவருடைய இதயத்தை வழிபடுவதும் அவரது இதய அன்பிற்கு நாம் ஏற்ற பதில் அன்பு செலுத்துவதும் இத்திருநாளின் நோக்கங்களாகும்.

**421. கிறிஸ்து அரசர் திருநாள் எப்போது கொண்டாடப்படுகிறது? அதன் சிறப்பு அம்சம் என்ன?**

இத்திருநாள் திருத்தந்தை 11-ஆம் பீயுசால் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டின் பொதுக்காலத்தின் இறுதி வாரத்தில் கொண்டாடப்படுகிறது. இயேசு 'மூவுலகிற்கும் உண்மையான அரசர்' என்று வெளிப்படுத்தவும் உலகம் முழுவதும் அவருடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டு அவருக்குத் தகுந்த வழிபாடு செலுத்தவும் அத்திருநாள் ஏற்படுத்தப்பட்டது. அன்று தூய்மைமிகு நற்கருணையை எழுந்தேற்றம் செய்து, கிறிஸ்துவின் திருமுன்னிலையில் அவரது திரு இதயத்திற்கு மானிடக்குலம் முழுவதும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.181

## எரேமியா அதிகாரம் 27 முதல் 52 முடிய

உங்கள் விடைகளை செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | | 15 | ❖ | | | | 04 | | |
| | 08 | | ❖ | | 10 | ❖ | | 14 | |
| | | 17 | | ❖ | | | 20 | | 26 |
| ❖ | | | 29 | 22 | | | ❖ | | ❖ |
| | | 01 | ❖ | | | 28 | 05 | | 09 |
| | ❖ | | 11 | | | 25 | | ❖ | |
| 16 | | | | | 18 | ❖ | | 13 | |
| ❖ | | ❖ | | | | | 06 | | ❖ |
| 27 | | 24 | 07 | 30 | ❖ | | 19 | | 23 |
| 02 | 21 | | ❖ | | | 12 | | ❖ | |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

2. ஆனால் அமைதியாகவே ............
3. கெதலியா .......... செய்யப்பட்டு —— தெரியவில்லை.
4. நீ என் ...............க் குழந்தை அல்லவா?
5. இஸ்மயேல் சிறைப்படுத்தி ..........விலிருந்து —— கொண்டார்கள்.
8. அம்மக்களுக்கு நலன் அளித்து ........... வாழ்வை வழங்குவேன்.
13. ஆறுதல் ........ அவர் மறுக்கின்றார்.
16. யாக்கோபுக்கு அது வேதனையின் ....................
17. இதற்கிடையில் பார்வோனின் ............ எகிப்தினின்று புறப்பட்டு வந்தது.
22. உம் கடவுளாகிய ஆண்டவர் —— உள்ள ...........

### வலமிருந்து இடம்

1. எப்பக்கமும் ஒரே ......... என மனிதர் ஓலமிடுவர்.
4. மேலும் ............ எல்லா மக்கள் —— இதுவே.
6. அவை .......... பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்படும்.
10. மோவாபின் ............. அண்மையில் உள்ளது.
12. .............. நடக்கவில்லை.
18. ............ சொல்வோர் மேல் வாள் வரும்.
20. அதன் ............ குன்றவில்லை.
22. இம்மனிதன் கண்டிப்பாய்ச் ........... வேண்டும்.
23. ............ உங்களுக்கு அடையாளம்.
25. நீ ஏட்டுச் ........... ஒன்றை எடுத்துக்கொள்.
26. போர் .......... ஒலிக்காது:
28. மகிழ்ச்சியோடு ............. மிதிப்பவன் எவனும் இல்லை.

### மேலிருந்து கீழ்

3. மோவாபின் ......... முறிந்து விட்டது.
4. உலகின் எல்லா ................ களும் அவர்களை —— செய்வேன்.
5. மக்கள் கேட்கும்படி —— எல்லாவற்றையும் ......... தலைவர்களிடம் எடுத்துரைத்தார்.
6. ............ சித்கேனூ என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும்.
8. அவர்களின் வீழ்ச்சியின் ஒலியால் .......... நடுங்கும்.
9. உன்னைப் ............. முகடுகளினின்று உருட்டி விடுவேன்.
10. தலைக் கவசங்களுடன் ........ வகுத்து நில்லுங்கள்.
11. வாளுக்குத் தப்பி பிழைத்த மக்கள் ....... நிலத்தில் —— கண்டடைந்தனர்.
13. ஏனெனில் உனது குற்றமோ .............
14. ........... மாளிகையையும் —— தீக்கிரையாக்கினர்.
15. எனவே யோயாக்கின் தன் ....... உடைகளைக் களைந்தெறிந்தான்.
17. அவற்றுக்குப் ...... எழுதி முத்திரையிடுவர்.
19. அவை போன்ற ............. பல சொற்களும் அவற்றோடு சேர்க்கப்பெற்றன.
23. மக்களினங்கள் .......... ஒருபோதும் அங்குச் செல்லமாட்டா.
24. ஏனெனில் இஸ்மயேலைப் பற்றி நீ கூறுவது .......... என்றார்
27. ............. மொட்டையடிக்கப்படும்.
28. எகிப்து ஓர் அழகான இளம் .............

### கீழிருந்து மேல்

7. அனாதைகளைப்பற்றிக் .......... கொள்ளாதே.
8. ................. நாட்டுவேனேயன்றி, பிடுங்கி எறியமாட்டேன்.
12. உன் ....... குரல் மண்ணுலகை நிறைத்தது.
16. பின்னர் அரசன் —— எரேமியா ....... கூடத்திற்கு மாற்றப்பட்டார்.
17. நம் கடவுளான ஆண்டவரின் செயலைச் சீயோனில் ........... சாற்றுவோம்.
18. இறைவாக்கினர் எரேமியா கேட்கும்படி ............. செப்பனியா —— காட்டினார்.
21. ............. நெஞ்சங்களுக்கு நான் நிறைவளிப்பேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 179 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
R. மேரி உஷா,
அடம்பன்,
மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
ஆ. கிரைசி,
பள்ளிமுனை,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
அ. விதுர்சன்,
கற்கிடந்தகுளம்,
முருங்கன்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 179ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. திரு. செ. அல்போன்சஸ், பெற்றா, மன்னார்.
02. E. நிஷாந்தினி, குழந்தையேசு வீதி, பேசாலை.
03. பி. ஆன் டினுஷிகா, கொக்குப்படையான், சிலாவத்துறை.
04. V. டிவைனா குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு.
05. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
06. யோ. ஆன் நிருஜன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
07. S. ஜெறோம், தாமரைக்குளம், அடம்பன்.
08. S. ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
09. L. பாலன், பெற்றா, மன்னார்.
10. திருமதி. T. S. லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
11. அ. இசக்கியேல், ஜோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
12. J. மேரி ஷாலினி கொடுதோர், கற்கிடந்தகுளம், முருங்கன்.
13. அ. ஜெஸ்லின், பாப்பாமோட்டை, அடம்பன்.
14. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
15. வி. வேஜினி டிலக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
16. ஏ. பெஞ்சமின், சாவற்கட்டு, மன்னார்.
17. அ. மேரி றொக்சன், புதுக்கமம், உயிலங்குளம்.
18. செல்வி. வயலட் யோண், யாழ்ப்பாணம்.
19. செ. கனகசபை, சிறுத்தோப்பு, பேசாலை.
20. தா. ஜாகுல நாயகி, வேப்பங்குளம்.
21. S. மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
22. ம. நிதர்சினி, முல்லைத்தீவு.
23. ஜெ. ஜெனவில், புதுக்கமம், உயிலங்குளம்.
24. பி. அன்றோ விதுசன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
25. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா, 5ம் வட்டாரம், வங்காலை.
26. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
27. றே. கற்றின் டி யோரா, கபித்தான் மோட்டை, அடம்பன்.
28. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
29. S. வரதன், லூக்கா வீதி, தாழ்வுபாடு.
30. அ. அன்ரனி ஆக்காஷ், கொக்குப்படையான், சிலாவத்துறை.
31. A. கிரியோன் சோசை, வங்காலை.
32. அ. சிந்துஜன், பாப்பாமோட்டை, அடம்பன்.
33. இராணி அரசரட்ணம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
34. A. அபிஷேக், கொக்குப்படையான், சிலாவத்துறை.
35. க. ஜான்சன், சிறுத்தோப்பு, பேசாலை.
36. றூ. மேரி ராஜ்மி டயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
37. R. கிங்ஸ்ரினோ, கபித்தான் மோட்டை, அடம்பன்.
38. அ. விபுஷிகன், சுகந்தபுரி, வங்காலை.
39. நி. மேரி சுஜாத்தா, தாமரைக்குளம், அடம்பன்.
40. கமலா கிறிஸ்ரோபர், பெற்றா, மன்னார்.
41. G. அல்பேட், திருகோணமலை.
42. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
43. டெபோறா மோகன்ராஜ், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
44. செ. பெலிஸிற்றாஸ், தாமரைக்குளம், அடம்பன்.
45. சி. மேரி ஆன் சபினா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
46. A. ஆசீர்வாதம் டலிமா, 5ம் வட்டாரம், வங்காலை.
47. நி. சுஜாணி, தாமரைக்குளம், அடம்பன்.
48. L. டெய்சி. பெற்றா, மன்னார்.
49. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
50. N. நிஜிம், தாமரைக்குளம், அடம்பன்.

## கண்டி தேசியக் குருத்துவக் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்துவரும் முதற்குருவாக அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார் கடந்த ஆறு வருட காலமாகப் பணிபுரிந்து வருகின்றார். இந்நிலையில் தற்பொழுது மேலும் ஒரு பொறுப்பு இலங்கை ஆயர் மன்றத்தினால் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பினைப் பெறும் வடமாகாணத்தைச் சேர்ந்த முதற்குரு இவர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார் 2000ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை தனது உயர்கல்வியை உரோமாபுரியில் மேற்கொண்டபின்னர் நாடு திரும்பினார். நாடு திரும்பியபின் முதல் நியமனமாக யாழ்ப்பாணம், கொழும்புத்துறை தூய பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உருவாக்குனராகவும், ஒழுக்க இறையியல் என்னும் பாடத்தின் விரிவுரையாளராகவும் நியமனம் பெற்றார்.

நான்கு வருடங்கள் இக்குருத்துவக் கல்லூரியில் உருவாக்குனராகவும் விரிவுரையாளராகவும் பணிபுரிந்த வேளையில் சக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தின் நிதியாளராகவும் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனராகவும் ஐந்து வருடங்கள் மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்து பணி ஆற்றினார். 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அருட்தந்தை அவர்கள் கண்டி தேசியக்குருத்துவக் கல்லூரியின் உருவாக்குனராகவும், விரிவுரையாளராகவும் நியமனம் பெற்று பணிபுரிந்து வருகிறார்.

இவர் 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான ஆறு மாதங்கள் உரோமாபுரியில் உள்ள ஊர்பானியானா பல்கலைக்கழகத்தில் தனது கல்வித்துறையைப் புதுப்பித்துக்கொண்டார். நாடு திரும்பியதும் குருத்துவக்கல்லூரிப் பணிகளோடுகூட கொழும்பில் இயங்கிவரும் அக்குவாயினஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் கற்பித்து வருகின்றார்.

அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் பிரிவில் அதிபர் பொறுப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் ஏற்கவுள்ளார்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## இலங்கை தேசிய அன்பியக் ......

4ஆம் பக்கத் தொடர்ச்சி

காலை கடந்து நண்பகல் வேளை நெருங்கியது. களைத்து, இளைத்து வந்த இக்குழுவினருக்கு பலரக சுவை நிறைந்த சிற்றூண்டிகள், குளிர்பானம் வழங்கப்பட்டது. தொடர்ந்து பேசாலைப் பங்கின் அன்பியச் செயற்பாட்டறிக்கையைக் கேட்டு அதனை இக்குழுவினர் பாராட்டினர்.

இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களில் இருந்து மன்னார் மறைமாவட்ட அன்பியங்களைப் பார்வையிட வந்திருந்த இந்தத் தேசியகுழுவினர் பல்வேறு அனுபவங்களை இங்கு பெற்றுக்கொண்டதைச் சுட்டிக்காட்டினர். கிறிஸ்துவின் இறையாட்சியை வெளிப்படுத்தி மென்மேலும் அன்பிய வாழ்வைக் கட்டி எழுப்பி சான்றுபகருமாறு எடுத்துக்கூறினர். பின்னர் தலைமன்னார் நோக்கி தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

### தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயம்

இலங்கைத் தேசிய குழுவின் 3ஆம் நாள், இறுதி நிகழ்வான, மதிய உணவு தலைமன்னாரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்போடும், பாசத்தோடும் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. நவரெட்ணம் அடிகளார் தேசியக் குழுவினரை வரவேற்றார். பல்வேறு வகையான கடலுணவினை, சுவைத்து மகிழ்ந்து பகிர்ந்துண்ணும் வாய்ப்பை இக்குழுவினர் பெற்றனர். படகேறிப் பயணித்து கடற்குளிப்பில் குதூகலித்து மகிழவும் தலைமன்னார் பங்குத்தந்தை ஏற்பாடு செய்திருந்தார்.

மதிய உணவின்பின் இலங்கைத் தேசிய குழுவின் இயக்குனர் அதன் செயலாளர், பொருளாளர் அனைத்து உறுப்பினர்களும், தாங்கள் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியான அனுபவங்களுக்கு வழிவகுத்த 2வது தேசிய குழுவின் கூட்டத்திற்காக நன்றி தெரிவித்தனர். மன்னார் மறைமாவட்டம் தமக்கு கிடத்தமைக்கும் இதற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து பாராட்டினர்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் , குருமுதல்வர், அருட்பணியாளர் அகஸ்ரீன், சத்தியராஜ், பெயிலன் குரூஸ், லக்ஸ்ரன் டீ சில்வா, வரோட் நிலைய இயக்குனர், மடு தியான இல்ல இயக்குனர், மடுப் பரிபாலகர், உதவிப்பரிபாலகர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளை மறைமாவட்ட அன்பிய இயக்குனர் ஆரோக்கியம் அடிகளார் தெரிவித்தார்.

இறுதி நாளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பறப்பாங்கண்டல் பங்குத்தந்தை, அன்பிய இணைப்பாளர்கள், பாலர்பாடசாலை மாணவ மாணவியர், சாந்திபுரம் பங்குத்தந்தை, பேசாலை பங்குத்தந்தை, அன்பியப் பணியாளர்களுக்கும், தலைமன்னார் பங்குத்தந்தை, பணியாளர்கள் அனைவருக்கும் பேருவகையோடு நன்றி தெரிவித்தார். மறைமாவட்ட மத்திய குழுவிற்கும் சிறப்பான நன்றிகள் கூறி தனது நன்றி உரையை நிறைவுசெய்தார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கு நீங்கள் வழங்கும் ஆதரவுக்கு நன்றி கூறுகின்றோம். பத்திரிகையைப் பெறும் நீங்கள், அதற்குரிய பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். நன்றி! **- மன்னா பதிப்பாசிரியர்**

# நீங்காத நினைவுகள்

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 11 - 1936

உதிர்வு 16 - 08 - 2011

**திரு. சிமியோன் செபஸ்ரியன் நூரம்**
**(இளைப்பாறிய கிராம சேவகர், பேசாலை, மன்னார்)**

அகவை எழுபத்தைந்து கடந்து நீங்கள் மறைந்தும்
உவகை எம்மில் மலரவில்லை இன்னும்.
ஆலய வழிபாடுகளில் அன்றொலித்த உம் கணீர் குரல்
இன்றும் எம் காதில் நின்று எதிரொலிக்கின்றன.

பாடகர் குழாமின் முதிர்ந்த நல் முத்து என்றும்
வாடாத வண்ணமலர்க் கொத்து நன்றென
நாளும் நாம் கொண்டாடிய சொத்து
நாளைய சந்ததிக்கும் நாம் விதைத்த வித்து.



நடிகனாக, சமூக சேவகனாக நாளும் வலம் வந்தீர்
முடிசூடா மன்னனாக அந்நாளில் அதிரவைத்தீர்
பன்முகங் காட்டும் பண்பாளராகப் பாரில் மிளிர்ந்தீர்
நன்னெறி நின்று நாளும் நல்வழி காட்டினீர்.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 - 08 - 1974

உதிர்வு 10 - 08 - 2014

**திருமதி. அன்ரன் யோகநாயகம் பிலோமினா**
**(லில்லி)**

(குமானாயங்குளம், அடம்பன்)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான்.11:25)

ஆசையாய் தூளிகட்டி அழகாய் பாட்டிசைத்து
நேசமாய் வளர்த்த அன்புத் தெய்வமே!
மூன்றாண்டு முடிந்ததுவோ உங்கள்
முகம் எமை நீங்கிச் சென்ற நாள்.
தாங்காத சோகம் தலைவிரித்தாடினும்
மலர்ப் பூங்காவாய் வாழ்ந்த
வாழ்க்கையினை நாம் மறவோம்
என்றும் உங்கள் நினைவலைகளுடன்,



பிரிவால் நினைந்துருகும்,
கணவன், மகள்.

## 8ம் ஆண்டு, 7 1/2 ஆண்டு நினைவஞ்சலி





**ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)**

**திரினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)**

**(கொன்வெண்ட் வீதி, மன்னார்.)**

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

"ஆண்டவர் தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா.115:6)

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
***சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.***
***தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்***


# லியோன்சின் புனித வளன் சபை உங்களை அழைக்கிறது!

**SISTERS OF ST. JOSEPH OF LYONS**


**தங்கையே,** உங்களை எம் வளன் சபை அன்போடு வரவேற்கிறது. அன்று "ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, 'உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தாரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்' என்றார்" (தொ.நு.12:1). இன்று ஆண்டவர் உங்களையும் அதற்காகவே அழைக்கிறார். புறப்படு மகளே! புறப்படு!!

**எம் சபையின் தோற்றம்:**
தோன்றிய இடம் : பிரான்ஸ் (லியோன்ஸ்) - 1650
தோற்றுவித்தவர்கள் : அருட்தந்தை ஜான்பீட்டர் மெதாய் சே.ச மற்றும் அன்னை ஜான்போண்ட் போன்
இந்தியாவில் தோற்றம் : மதுரை - 1906
இலங்கையில் தோற்றம் : மன்னார் (நொச்சிக்குளம்)- 2012
இலங்கையில் எம் இல்லங்கள் : மன்னார், நொச்சிக்குளம் யாழ்ப்பாணம் (மணல்காடு).

**எம் சபையின் பணிகள்:**
கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி, சிறார் நல்வாழ்வுப் பணி, முதியோரைக் கண்காணிக்கும் பணி, பார்வையற்றோரை வாழ்வில் ஊக்குவிக்கும் பணி, அயல்நாடுகளில் எம் அன்புப் பணி.
எம் சபை வேரோடிய இடங்கள்: பிரான்ஸ், அமெரிக்கா, மெக்சிகோ, எகிப்து, ஆப்பிரிக்கா, ஐவரிகோஸ்ட், புர்கினோ பாஸோ, இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, அயர்லாந்து, லெபனன் கிரீஸ், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம்.
**இந்தியாவில்** : தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மத்தியபிரதேசம், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம்.

**தகுதி** : இறைப்பணியில் ஆர்வம், நல்ல உடல்நலம், 10ம்/ OL/AL மற்றும் அதற்கு மேல் படிப்பு.

**தொடர்பு கொள்க:**
Vocation promoter,
San Jose Nilaya Formation House.
Hospital Road, Convent Lane.
Mannar - Srilanka.
Mobile:0773727865 CDMA:0232251803

## மடுத்திருத்தலத்தின் ......

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் இவ்விழா ஆரம்பமாகியது. எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் ஆராதனையும் நற்கருணைப் பவனி மற்றும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும். அடுத்த நாள் 15ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி கூட்டுப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அடுத்த மன்னாவில் ஆவணித் திருவிழா பற்றிய விரிவான விடயங்கள் இடம்பெறும்.

## அக்குவானஸ் பல்கலைக் ......

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

இலங்கையில் 170 வருடங்களாகப் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றிவரும் அமலமரித்தியாகிகள், மாணவர்களின் ஆரம்ப, இடைநிலைக் கல்வி விருத்தியில் நீண்ட காலமாகப் பணியாற்றிவருவது யாவரும் அறிந்ததே. தற்பொழுது உயர் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னாரில் இயங்கிவரும் "ஞானோதயம்" எனும் அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி மையத்தை கொழும்பு அக்குவானஸ் பல்கலைக்கல்லூரியுடன் இணைத்த ஓர் உயர் கல்வி நிறுவனமாகத் தரம் உயர்த்தி உள்ளார்கள்.

இந்த அனுமதியைப் பயன்படுத்தி வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னார் மாவட்டத்தில் மாத்திரமல்ல அவர்கள் தற்போது பணிபுரியும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற ஏனைய மாவட்ட மாணவர்களின் நன்மைகருதி அம்மாவட்டங்களிலுள்ள தம் நிறுவனங்களில் மாணவர்களை இவ் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிக்கு ஆயத்தப்படுத்தி மன்னார் ஞானோதயம் உயர்கல்வி நிறுவனம் மூலமாக அக்குவானஸ் பல்கலைக் கல்லூரியின் ஆங்கில டிப்ளோமாவிற்கான சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். எதிர்காலத்தில் ஏனைய துறைசார்ந்த டிப்ளோமா மற்றும் இளநிலைப் பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் இவ் உயர்கல்வி நிறுவனத்தினால் கற்பிக்கப்படுவற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அருள்மழையில் நனைந்த ஆடி ........

**9ஆம் பக்கத் தொடர்ச்சி**

தேவநற்கருணை தினமான 25.07.2017 அன்று மாலை புகழ்ச்சி ஆராதனைகளை முறையே அருட்தந்தையர்களான வரதன் குலாஸ், நியூட்டன் மற்றும் ரஜனிகாந்த் ஆகியோர் நெறிப்படுத்தினர். புகழ்ச்சிப் பாடல்கள் மற்றும் மறையுரைகளுடன் பக்திப் பரவசமாக நற்கருணை ஆராதனை இடம்பெற்றது.

திருவிழா தினத்தன்று மேதகு ஆயர் அவர்கள் அருட்தந்தையர்கள் புடைசூழ மன்/ சென்ற் ஆன்ஸ் ம.ம.வி மாணவர்களின் இன்னிய வாத்திய இசையுடன் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டதுடன் திருவிழாத் திருப்பலி யூலை 26ஆம் திகதி காலை 6.00 மணிக்கு மறைமாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது.

யூலை 25ஆம் திகதி மாலை நடைபெற்ற தேவநற்கருணைப் பவனியும் 26ஆம் திகதி காலையில் இடம்பெற்ற ஆனாள் அன்னையின் திருச்சுரூபப் பவனியும் வலம்புரிச்சங்கைக் கடற்குதிரைகள் இழுத்துச் செல்வதைப் போன்ற பிரமாண்டமான ஊர்தியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், திணைக்களத் தலைவர்கள், கல்விமான்கள் உட்பட பெருந்திரளான பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு இறைவனின் அருள் ஆசீயைப் பெற்றுக்கொண்டமை மகிழ்ச்சிக்குரியது. திருவிழா நிகழ்வுகளை கனகச்சிதமாக நெறிப்படுத்திய பங்குத்தந்தை அருட்திரு. சீ. ஜெயபாலன் மற்றும் உதவிப்பங்குத்தந்தை அருட்திரு. றொஷான் ஆகியோர் நன்றிக்கும் பாராட்டுக்களுக்கும் உரியவர்களே. ஆனாள் அன்னையின் அருளும் ஆசீரும் அனைவருக்கும் நிறைவாகக் கிடைத்திட வேண்டுகின்றேன்.

*தகவல்: எஸ். சூசைநாயகம் றெவல் (JP),*
*செயலாளர், ஆலய அருட்பணிப் பேரவை, வங்காலை.*

## யாழ்ப்பாணத்தில் லியோன் .....

**9ஆம் பக்கத் தொடர்ச்சி**

திருப்பலியைத் தொடர்ந்து அவர்களுடைய கன்னியர் மடம் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
லியோன் புனித வளனார் சபையின் துணை மாகாணத் தலைவி அருட்சகோதரி சிறிய புஷ்பம் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

அருட்சகோதரிகள் எலிசபெத் கிரேஷியா, ஆரோக்கிய மேரி ஆகிய மூன்று பேர் இம்மடத்தில் தங்கியிருந்து பணியாற்றுகிறார்கள்.

## மன்னார் மறைசாட்சிகள் .....


**11ஆம் பக்கத் தொடர்ச்சி**

அதைத்தொடர்ந்து அமைப்பின் செயலாளர் ரட்னேஸ் (ஓலைத்தொடுவாய்) அவர்கள் நன்றியுரையாற்றினார்.

அதன்பிறகு மறைசாட்சிகள் கல்லறை ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. அத்தோடு வரலாற்றுக் காட்சிகள் அடங்கிய பதாதைகள் (Board) மறைசாட்சிகள் கல்லறைகளைச் சுற்றி அமைக்கப்பட்டு மேதகு ஆயர், அப்போஸ்தலிக்க பரிபாலகர் அவர்களாலும் குருக்களாலும் முக்கிய பிரமுகர்களாலும் திறந்துவைக்கப்பட்டது. மேலும் தோட்டவெளி ஆலயத்தில் யாத்திரிகளுக்கான செபமாலைக் கடை ஒன்றும் ஆயர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து விருந்தினர் உபசாரமும், மரம் நடுதல், கல்லறையை மேம்படுத்த அடிக்கல் நாட்டுதல், ஆலய நிலத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்புதல், வரவேற்பு மாதா கெபியை நவீன முறையில் கட்டுதல் போன்றவற்றிக்கு மேதகு ஆயர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இவ்விழா ஒழுங்குகளை மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் தலைவர் திரு. அமிர்தம் (நெடுங்கண்டல்) அவர்கள் தலைமையிலான விழாக்குழு செவ்வனே செய்து விழாவைச் சிறப்புற நடாத்தியமை குறிப்பிடத்தக்குந்த விடயமாகும்.

**தகவல்** :- எஸ். அந்தோனிப்பிச்சை (M.A.M.Phil)
மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு
(ஸ்தாபகர், ஆய்வாளர், ஆலோசகர், தொடர்பாளர்)



# தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து !



1968.08.17



2017.08.17

### திரு. செபஸ்ரியான் பச்சேக், திருமதி. மேரி யுஸ்ரீனா பறுனாந்து

**(சென் யூட்ஸ் வீதி, பேசாலை)**

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணம் தந்த நேசத் தம்பதியினரே!
மணவாழ்வு மெய்ப்பட
இனிய ஐம்பது ஆண்டு கண்டீர்.
உயிரானீர், உறவானீர், நட்பானீர், நலமானீர்.

நீடூழி வாழ்ந்து இறையாசீரால் நிறைய
எமக்கினியும் இறையாசீராயத் திகழ
மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

**வாழ்த்துவோர் :** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்!




**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, தம்பிகள், தங்கைகள், அம்மையா, அம்மம்மா, சின்னையாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சிமார், மற்றும் உறவுகள்.
முத்தரிப்புத்துறை.

மன்னார் மறைமாவட்டக் குருவும் முத்தரிப்புத்துறை தூய செங்கோல் அன்னையின் மைந்தனுமாகிய அருட்தந்தை. அருளப்பு கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளார் இத்தாலியின் உரோமாபுரியிலுள்ள ஊர்பானியானா பாப்பிறை பல்கலைக்கழகத்தில் கடந்த 04 வருடங்களாக திருவிவிலிய இறையியலில் தனது உயர்கல்வியை கற்று, தான் கற்ற பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பாடங்களிலும் சராசரியாக 29.17/30 = Summa Cum Laude (97.23/100) பெறுபேற்றினைப்பெற்று தான் கற்ற திருவிவிலிய இறையியல் துறையில் பல்கலைக்கழகத்தில் முதல்நிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

எனவே அவருக்கு அனைத்து விதத்திலும் உதவிபுரிந்து அவரை வழிநடத்திய இறைவனுக்கு நன்றிகள். அவரை மேற்படிப்புக்காகத் தெரிவுசெய்து அனைத்து உதவிகளையும் வழங்கி ஊக்கமுமளித்த மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகைக்கும், மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கும் மற்றும் குருமுதல்வர் ஏனைய குருக்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். அருட்தந்தை அவர்கள் இதுபோன்ற பல வெற்றிகளை அடைந்து இறைவனின் பணியை முனைப்புடன் எடுத்துச்செல்ல இறைவன் துணைபுரிய ஆசிப்பதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


## அருட்திரு. செ. அன்புராசாவின் இறுவட்டு




யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு. செ. அன்புராசா அவர்கள் 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' என்ற பெயரில் புதிய பாடல் இறுவட்டு ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ளார். இந்த இறுவட்டின் சில பாடல்கள் மன்னார் கலையருவி ஒலிப்பதிவுக்கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் சிறப்பாக அமைந்துள்ள இப்பாடல்களை சிறுவர்களை வழிநடத்துவோர் வாங்கிப் பயனடையலாம். கலையருவியில் இந்த இறுவட்டைப் பெற்றுக்கொள்ளலாம். விலை .... ரூபாய்.

## அருட்திரு. ம. அருட்பிரகாசத்தின் நூல்




மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. ம. க. அருள்பிரகாசம் அவர்கள் "மன்னார் மறைமாவட்டத்தில் தூய யோசவ் வாஸ்" என்ற பெயரில் நூல் ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூல் கலையருவி வெளியீடாக வந்துள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தில் யோசவ்வாஸ் அடிகளாரோடு தொடர்பபுடைய இடங்கள் பற்றிய பல குறிப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. இன்னும் பல சிறந்த கட்டுரைகளையும் இந்நூல் தாங்கி வந்துள்ளது. கலையருவியில் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம். விலை : 120 ரூபாய்.

## நீங்காத நினைவுகள்

### 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17
08
1974



உதிர்வு
18
08
2014

### அருட்பணி. தேவதாசன் எட்வின் (அ.ம.தி). குருத்துவம் – 12.11.2007

எங்கள் வீட்டில் இளையவரே! எமக்கு எல்லாம் ஆனவரே!
கள்ளம் இல்லா உள்ளத்தினரே கடவுள் வழியைத் தேர்ந்தீரே

இறைபணி நிறைவாய் புரிந்தவரே
இடையிலே இறைவன் அழைத்தாரோ?
கண்களில் கண்ணீர் பெருகிடவே
கதறியே நிற்கிறோம் அறிவீரோ?

நித்தமும் உம்மை நினைக்கின்றோம்
நிர்மலா காட்சி தருவீரோ?
கர்த்தராம் இயேசு நாதரிடம்
கனிவுடன் எமக்காய் வேண்டிடுவீர்.

**பிரிவால் நினைந்துருகும்** - குடும்பத்தினர்.

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18
12
1950



உதிர்வு
09
08
2016

### திரு. J.X. றொசாறி கர்வாலோ

**(பட்டித்தோட்டம், மன்னார்)**

**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது" (1கொரிந்தியர் 15:42)**

**அன்பொன்று இழந்தின்று ஆண்டொன்று!**
பாசமென்னும் விதையொன்றை எம் மனதில் பதியமிட்டு
அன்பென்னும் நீர் ஊற்றி அதை வழர வைத்தாய்.
அதன் நிழலில் நாம் நெடுநாள் வாழ்ந்திட முடியாது
எம்மைப் பிரிந்து எங்கு சென்றாய்?
உம் பிரிவைத் தாங்க முடியாது
தவிக்கின்றோம் நாங்கள் இங்கு!

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேத்தி, உறவினர்கள்.

### 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
01
1928



உதிர்வு
13
08
2015

### திரு. ஞானப்பிரகாசம் சூசைமுத்து

**(பிறப்பிடம்: முல்லைத்தீவு, வதிவிடம்: மன்னார்)**

அன்பு அப்பா! கடந்த 13.08.2015இல் நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இரண்டு வருடங்கள் ஆனாலும், உங்கள் அருமை இழந்து தவிக்கின்றோம்.

அப்பா! மௌனம் உங்கள் தாய் மொழி அல்லவே! உங்கள் சிம்மக்குலை எம்மருகில் கேட்காவிடினும், நீங்கள் எங்கும் சென்று விடவில்லை என்ற உணர்வு எம்மிடம் உள்ளது. ஆன்மீகக் காரியங்களில் உங்களது அக்கறையும், கரிசனையும் அளப்பரியது. நோயென்று படுக்காது, யாரையுமே வருத்தாது, அமைதியில் இளைப்பாறிட, எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நல்ல மரணத்தைக் கொடுத்தருளினார். உங்களது ஆன்மா இறை சந்நிதியில் இளைப்பாறிட செபிக்கிறோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02
03
1928



உதிர்வு
06
08
2012

### திரு. பேதுறு இராயப்பு (ஓய்வுநிலை அதிபர்)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது"**
(திருப்பாடல்: 116-15)

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
மாறாத புன்னகையுடன்
எம்முடன் நீங்கள் வாழ்ந்தீர்கள்.
இரக்கமும் இறைபற்றும்
எளிமையும் பிறர் சினேகமும்
நீங்கள் எமக்களித்த சொத்துக்கள்
காலம் முழுவதும் உம்மை மறவோம்.

பிரிவால் நினைந்துருகும் : குடும்பத்தினர்